Vol. 38 Issue No. 49 2025 Oct 04-07 Rs. 30
ஆண்டு – 38 இதழ் – 49 2025 அக். 04–07 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்



## கக்கன் பேத்திக்கு நீதிமன்றம் பளார்!



## அமித்ஷா ஆபரேஷன்! சரண்டரான பிணநாயகன் விஜய்!

## அ.தி.மு.க.வில் சீட் வியாபாரம்! கல்லா கட்டும் எடப்பாடி மச்சான்!




# கூட்டணி ப
# டெல்லிக்கு ப
# தமிழக கா

"ஹலோ தலைவரே, ஆயுத பூஜை கொண்டாட்டங்கள் தொடங்கியபோதும், கரூர் நிகழ்வுகள் அதன் உற்சாகத்தைப் பரவலாகவே மட்டுப்படுத்தியிருக்கு."

"ஆமாம்பா, 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'னு கலித்தொகை, தமிழர்களின் பண்புபற்றிப் பேசுது. அதன்படி, அடுத்தவரின் நிலைமையை உணர்ந்து அதற்கேற்ப நடந்துகொள்வது நம்மவர் இயல்பு. நீ உங்கிட்ட இருக்கும் தகவல்களைச் சொல்லு."

"சொல்றேங்க தலைவரே, தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலர், 'இந்தமுறை கூடுதல் சீட்டு; ஆட்சியில் பங்கு' என்று முழக்கம் எழுப்பி தி.மு.க.வுக்கு டார்ச்சரைக் கொடுத்து வருகிறார்கள். இதனால் காங்கிரஸ் மீது தி.மு.க. அதிருப்தியில் இருக்கிறது. இந்த நிலையில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை மூலம், அக்கட்சியின் எம்.பி.க்களை 27 ஆம் தேதி, அறிவாலயத்துக்கே அழைத்தார் ஸ்டாலின். அதன்படி காங்கிரஸின் 9 எம்.பி.க்களில் கார்த்தி சிதம்பரம், சசிகாந்த் செந்தில், மாணிக்கம் தாக்கூர் ஆகிய மூவரைத் தவிர விஷ்ணுபிரசாத், ஜோதிமணி, கோபிநாத், விஜய்வசந்த், சுதா, ராபர்ட் புரூஸ் ஆகிய 6 பேர் அறிவாலயம் வந்தனர். அந்த சந்திப்பில் தி.மு.க. எம்.பி. கனிமொழியும் கலந்துகொண்டார். அப்போது காங்கிரஸ் எம்.பி.க்களிடம், 'உங்கள் வெற்றிக்கு தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும், தி.மு.க. நிர்வாகிகளும் கடுமையாக உழைத்தது போல, சட்டமன்றத் தேர்தலில் அவர்களின் வெற்றிக்காக நீங்கள் உழைக்கவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். இதை காங்கிரஸ் எம்.பி.க்களும் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டனர்."

"இந்தக் கூட்டத்தில் வேறு என்னவெல்லாம் பேசப்பட்டதாம்?"

"தற்போதைய அரசியல் நிலவரம் பற்றியும், விஜய்யின் அரசியல் பற்றியும், அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணி பற்றியும் காங்கிரஸ் எம்.பி.க்களின் கருத்துக்களை ஸ்டாலின் கேட்டறிந்தாராம். பின்னர் காங்கிரஸ் ஜோதிமணி பேசும்போது, தி.மு.க.வுடன் நாங்கள் கூட்டணியில் இருக்கிறோம். அப்படியிருக்கும்போது கரூரில் காங்கிரஸ் நிர்வாகிகளை தி.மு.க.வில் இணைக்கிறார்கள் என வருத்தப்பட்டிருக்கிறார். இதைக்கேட்ட ஸ்டாலின் இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காது என சொல்லியிருக்கிறார். அப்போது, 'கூட்டணிக்குள் சிக்கல்களை உருவாக்குவதுபோல, காங்கிரஸ் தலைவர்கள் சமீபகாலமாக பேசிவருவது, நம் கூட்டணிக்கு ஆரோக்கியமானது அல்ல' என்று ஸ்டாலின் அழுத்தம் கொடுத்துச் சொல்ல, 'சம்மந்தப் பட்டவர்களிடம் இதுபற்றிப் பேசுகிறோம். இனி அது போன்ற சர்ச்சைகள் வராமல் பார்த்துக் கொள்கிறோம்' என்று செல்வப்பெருந்தகை உறுதியளித்திருக்கிறார். கூட்டத்தின் நிறைவில் 'எங்கள் தொகுதிகள் சார்ந்த பல கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். அதை நிறைவேற்றித் தாருங்கள்' என்றபடி காங்கிரஸ் எம்.பி.க்கள், கோரிக்கை மனுக்களைக் கொடுக்க, 'நிச்சயம் பரிசீலிக்கிறேன்' என்று உறுதியளித்திருக்கிறார் முதல்வர். இது காங்கிரஸ் தரப்புக்கு மகிழ்வைத் தந்திருக்கிறதாம்."

"இந்த நிலையில் தமிழக காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர் டெல்லி சென்று, விஜய்யுடன் கூட்டணி வைக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்களாமே?"

"காங்கிரஸ் சீனியர்கள் சிலரும், எம்.எல்.ஏ. சீட் கனவில் இருக்கும் சிலரும் டெல்லிக்குப் படையெடுத்துச் சென்று,




www.nakkheeran.in

திருச்சியில் ஸ்கேன் ஊழியரை எட்டி உதைத்ததாக சட்டக் கல்லூரி மாணவி கைது


ஸ்டாலினுடன் காங்கிரஸ் டீம்

# ...மாற்றம்! ...டையெடுத்த ...ங்கிரஸ்!


காங்கிரசின் அகில இந்தியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் ஆகியோரைச் சந்தித்திருக்கிறார்கள். அப்போது, நடிகர் விஜய்யின் சுற்றுப்பயணம் குறித்தும், அவருக்குக் கூடும் கூட்டம் குறித்தும் சம்மந்தப்பட்ட வீடியோக்களைப் போட்டுக்காட்டி, ‘நாம் விஜய் கட்சியுடன் கூட்டணி வைத்தால் 60-க்கும் மேற்பட்ட தொகுதிகளை வாங்கலாம். கூட்டணி ஆட்சியும் அமையும். துணை முதல்வர் பதவியும் நம் கட்சிக்குக் கிடைக்கும். கடந்த 60 ஆண்டுகளாக தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தில் இல்லாத நம் கட்சிக்கு, இதன் மூலம் அதிகாரமும், செல்வாக்கும் கிடைக்கும்’ என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு குறித்த ஒரு அலசல் ரிப்போர்ட்டையும் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் கூர்ந்து கேட்ட கார்கேவும், வேணுவும், ‘தமிழகத் தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களுக்கு மேல் இருக்கிறது. எனவே டிசம்பரில் பார்த்துக்கொள்ளலாம், போய் வேலையைப் பாருங்கள்’ என்றபடி அவர்களை அனுப்பி வைத்துவிட்டார்களாம்.”

“சரிப்பா, நெல்லை கிழக்கு தி.மு.க. மா.செ.வின் பவரைக் குறைத்திருக்கிறதே அறிவாலயம்? எதனால் இந்த அதிரடி?”

“ஆமாங்க தலைவரே, நெல்லை தி.மு.க. மா.செ. ஆவுடையப்பன் வசம் அம்பை, நாங்குநேரி, ராதாபுரம்னு மூணு தொகுதிகள் இருந்தது. இந்த நிலையில், நாடார் சமூக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாங்குநேரியையும், ராதாபுரத்தையும் பிரிச்சு, நெல்லை கிழக்கு மாவட்டம்னு புதிதாக உருவாக்கி, அதற்கு புதிய மா.செ.வாக, இந்து நாடார் பிரிவைச் சேர்ந்த கிரகாம்பெல்லை நியமிச்சிருக்கு அறிவாலயம். அதேபோல் அம்பை, ஆலங்குளம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட, நெல்லை மேற்கு மாவட்டத்தை உருவாக்கி, அதை ஆவுடையப்பன் வசம் ஒப்படைச்சிருக்காங்க. இதன் மூலம் ஆவுடையப்பனின் அதிகார வரம்பு, இரண்டு தொகுதிகள்னு சுருங்கிவிட்டது. இந்த பவர் குறைப்புக்குக் காரணம், அண்மைக்காலமாக அவர் பெரிய அளவில் கட்சி நிகழ்ச்சிகள் எதையும் நடத்தலையாம். அப்படியே நடத்தப்பட்ட ஒரு சில நிகழ்ச்சிகளின் செலவுகளையும், மற்ற நிர்வாகிகளின் தலையில் அவர் கட்டிட்டாராம். அதேபோல் சீனியர் கட்சிக்காரங்களுக்கு கட்சித் தலைமை கொடுத்த உதவித் தொகையும் அவர்களுக்கு முழுமையாகப் போய்ச் சேரலையாம். அதோட கடந்த 2024 எம்.பி.தேர்தலில் இவர் உள்ளடி வேலைகளில் இறங்கியதாகவும் சர்ச்சைகள் கிளம்புச்சு. இதெல்லாம்தான் அவரது அதிகாரக் குறைப்புக்குக் காரணம்னு சொல்றாங்க.”

“தேசிய புலனாய்வு முகமை எனப்படும் என்.ஐ.ஏ. வால், ஆதவ் அர்ஜுனா குறிவைக்கப்பட்டிருக்கிறார் என்கிறார்களே?”

“விஜய்யின் த.வெ.க. கட்சிப் பிரமுகரான ஆதவ் அர்ஜுனா, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக, ‘தமிழகம் மணிப்பூராக மாறும்’ என்று சவால்விட்டு டிவிட் போட்டிருந்தார். இதைத் தொடர்ந்து மத்திய அரசின் கண்காணிப்பு வளையத்திற்குள்ளும் அவர் வந்திருக்கிறாராம். எனவே அவரை வெகுவிரைவில் என்.ஐ.ஏ. விசாரிக்கும் என்கிறது டெல்லி தகவல். இதைத் தொடர்ந்து பா.ஜ.க.வின் தலைமையைச் சமாதானப்படுத்த டெல்லி விரைந்திருக்கிறார். இவருக்கு இப்படிப்பட்ட டிவிட்டுக்களை யார் எழுதிக் கொடுக்கிறார்கள் என்று ஆராய்ந்த என்.ஐ.ஏ., ஒரு பத்திரிகையாளர்தான் இதைச் செய்கிறார் என்பதையும் கண்டு பிடித்திருக்கிறதாம்.”


தமிழ்க்குமரன்

“அ.தி.மு.க.வில் இப்போதே சீட்டுக்கு பண வசூலை ஆரம்பித்துவிட்டார்களே?”

விக்கிரவாண்டி காட்டன் மில் அருகே சுற்றுலா சென்ற கார் தீப்பிடித்து 3 பேர் உயிரிழப்பு

# அ.தி.மு.க.வில் சீட் வியாபாரம்! கல்லா கட்டும் எடப்பாடி மச்சான்!



எடப்பாடியுடன் -மச்சான் வெங்கடேசன்

"உண்மைதாங்க தலைவரே, 2026 தேர்தலில் சீட் தருவதற்கு கட்சிக்காரர்களிடம் இப்போதே பண வசூலை அ.தி.மு.க. தரப்பு ஆரம்பித்துவிட்டதாம். இந்த வசூல் குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், எடப்பாடியின் மச்சான் வெங்கடேசன், தனது ஆதரவாளரான சங்ககிரி அ.தி.மு.க. ஒ.செ.வான ரத்தினம் மூலம் இந்த வசூலைச் செய்துவருகிறாராம். மேலும் எடப்பாடியுடன் முறுக்கிக்கொண்டிருக்கும் செங்கோட்டையனின் கட்சிப் பதவிகள் பறிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவருக்கு செல்வாக்கான பகுதிகளில், அவர் ஆலோசனையின் பேரிலோ, பரிந்துரையின் பேரிலோ ஒதுக்க வேண்டிய சீட்டுகளையெல்லாம் இந்த டீம், விருப்பம்போல் விற்றுவருகிறதாம். அந்த வகையில், சங்ககிரியில் செங்ஸின் ஆதரவாளரான ராஜாவுக்கு ஒதுக்கப்போவதாகச் சொல்லப்பட்ட சீட்டை, இப்போதே அபூர்வா பட்டு நிறுவன உரிமையாளர் மணிகண்டனுக்குத் தருவதாகச் சொல்லி, கணிசமாக வசூல் செய்திருக்கிறார்களாம். இந்த வசூல் விவகாரம் அ.தி.மு.க.வில் பரபரப்பை ஏற்படுத்திவருகிறது."

"இந்த நிலையில் கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பை, எடப்பாடி மாற்றவிருக்கிறார் என்கிறார்களே?"

"தேர்தலுக்கு முன்னதாக, முதலில் அங்கே மா.செ.க்கள் பலரையும் மாற்ற முடிவெடுத்திருக்கிறாராம் எடப்பாடி. அதேபோல் தனக்கு அதிக விசுவாசம் காட்டிவரும் மாஜி மந்திரி சி.வி.சண்முகத்துக்குக் கட்சியில் பதவிஉயர்வு கொடுக்கும் திட்டமும் அவரிடம் இருக்கிறதாம். அதேபோல் தனக்கு எதிராகக் கட்சியில் குழிவெட்டும் சிலரை, ஓரம்கட்டும் நடவடிக்கையிலும் அவர் அதிரடியாக இறங்கவிருக்கிறார் என்கிறார்கள் அ.தி.மு.க. சீனியர்கள். அதனால் மா.செ.க்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும், எந்த நேரத்தில் எடப்பாடி என்ன செய்வாரோ என்கிற குழப்பத்திலேயே இருக்காங்களாம்."

"பா.ஜ.க. பிரமுகரை, எடப்பாடி அ.தி.மு.க.வில் சேர்த்தது, அங்கே சர்ச்சையை ஏற்படுத்திவருகிறதே?"

"அ.தி.மு.க.வைச் சேர்ந்த, சென்னை காரப்பாக்கம் லியோசுந்தரம், ஒரு காலத்தில் ஜெ.வின் நம்பிக்கையைப் பெற்றவர். கடந்த உள்ளாட்சித் தேர்தலில் இவருக்கு போட்டியிட எடப்பாடி வாய்ப்பைத் தரவில்லை. இதனால் சென்னை மாநகராட்சியின் 198ஆவது வார்டில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார் லியோ. இவர் ஒருகட்டத்தில் பா.ஜ.க.வில் இணைந்தார். அங்கே ஆன்மீகம் மற்றும் ஆலய மேம்பாட்டுப் பிரிவின் மாநில துணைத் தலைவர் பதவி இவருக்கு கொடுக்கப்பட்டது. சில வருடங்களாக பா.ஜ.க.வில் இருந்த லியோ சுந்தரம், சமீபத்தில் சேலத்தில் எடப்பாடியை சந்தித்து, அ.தி.மு.க.வில் மீண்டும் இணைந்திருக்கிறார். 'எப்போதும்போல கட்சியில்

www.nakkheeran.in

சிறப்பாகப் பணியாற்றுங்கள். உங்களுக்கான அங்கீகாரம் உரிய நேரத்தில் கிடைக்கும்' என்று அவரை வாழ்த்தி இருக்கிறார் எடப்பாடி. அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும்போது, 'பா.ஜ.க.வைச் சேர்ந்தவரை எப்படி அ.தி.மு.க.வில் எடப்பாடியே சேர்த்துக்கொள்ளலாம்? இதுதான் கூட்டணி தர்மமா?' என்று, பா.ஜ.க.வினர் சர்ச்சையைக் கிளப்பி வருகின்றனர். இது தொடர்பான புகாரும் பா.ஜ.க. தலைமைக்குச் சென்றுகொண்டிருக்கிறதாம்."

"பா.ம.க.வுக்கு புதிய இளைஞரணி தலைவரை ராமதாஸ் நியமித்திருக்கிறாரே?"

''பா.ம.க.வில் ஜி.கே.மணியின் மகன் தமிழ்க்குமரனை இளைஞரணி தலைவராக ஆக்கியுள்ளாராம் ராமதாஸ். ஏற்கனவே அவரை அதே இளைஞரணிப் பதவியில் ராமதாஸ் அமர்த்தியபோது அன்புமணி அதனை ஏற்காமல் நிராகரித்தார். இப்போது அந்த விருப்பத்தை நிறைவேற்றியிருக்கிறார் தைலாபுரத்துக்காரர். 'இனி இதுபோன்ற அன்புமணியால் நிராகரிக்கப்பட்ட நியமனங்கள் எல்லாம் இடைஞ்சல் இல்லாமல் தெம்பாக நடக்கும்' என்கிறார்கள் ராமதாஸ் தரப்பினர்."

''கரூர் எஸ்.பி. இன்னும் மாற்றப்பட வில்லையே?"

"சட்டம் -ஒழுங்கு தொடர்பான சம்பவங்கள் நடந்தால், சம்பந்தப்பட்ட மாவட்ட காவல்துறை உயரதிகாரிகளை மாற்றுவது வழக்கம். அதன்படி, கரூர் அசம்பாவிதத்திற்குப் பிறகு அங்குள்ள காவல்துறை எஸ்.பி. ஜோஸ் தங்கையாவை மாற்றவேண்டும் என்ற ஆலோசனையை காவல்துறை அதிகாரிகள் முன்வைத்தார்களாம். காரணம், சம்பவம் நடந்தபோது அங்கு ஸ்பாட்டுக்கு அவர் செல்லவில்லையாம். இவர் சட்டம் -ஒழுங்கு ஏ.டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசிர்வாதத்தின் நெருங்கிய உறவினராம். இப்போது அவரை மாற்றினால் அது விஜய்யின் குற்றச்சாட்டுக்கு இசைவளிப்பதுபோல் ஆகிவிடும் என்று மாஜி தி.மு.க. அமைச்சர் செந்தில்பாலாஜி சொன்னதால், மாற்றத்தை அரசின் மேல்மட்டம் ஏற்கவில்லையாம். கரூர் சம்பவத்துக்குப் பின் பிரச்சார டூருக்குத் திட்டமிட்டிருந்த தே.மு.தி.க. பிரேமலதாவும், பா.ஜ.க. நயினாரும் தங்கள் நிகழ்ச்சிகளை ரத்து செய்திருக்கிறார்கள். கூட்டத்தைக் கண்டாலே தமிழக அரசியல் கட்சிகளுக்கு பயம் வரும்படி செய்திருக்கிறது கரூர்."

''தமிழக டி.ஜி.பி. நியமன விவகாரத்தில் தமிழக அரசுக்கு டார்ச்சர் கொடுத்துவருகிறதே டெல்லி?"

"ஆமாங்க தலைவரே, தமிழகத்துக்கான புதிய டி.ஜி.பி. நியமனம் தொடர்பாக, கடந்த 26 ஆம் தேதி டெல்லி சென்ற உள்துறைச் செயலர் தலைமையிலான டீமிடம், மூன்றுபேர் கொண்ட பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் உள்ளவர்களில் ஒருவரைத்தான் தமிழக டி.ஜி.பி.யாக நியமிக்க முடியும். ஆனால் டெல்லி கொடுத்த இந்த மூவர் பட்டியலில், தமிழக டி.ஜி.பி.யாக இங்குள்ள தி.மு.க. அரசு நியமிக்க விரும்பிய அதிகாரிகளின் பெயர்கள் இல்லாமல் செய்திருக்கிறது டெல்லி. அதாவது அரசின் புகார்களையும் அதிருப்தியையும் சம்பாதித்திருக்கும் சீமா அகர்வால், ராஜீவ், சந்தீப்ராய் ரத்தோர் ஆகிய மூவரின் பெயர்கள் மட்டுமே அதில் இருந்திருக்கிறது. குறிப்பாக டி.ஜி.பி.யாக தமிழக அரசு நியமிக்க விரும்பிய தற்போதைய பொறுப்பு டி.ஜி.பி. வெங்கட்ராமனின் பெயர் இல்லை. அதனால் இதுகுறித்து அடுத்த வாரம் விவாதிக்கலாம் என்று சொல்லிவிட்டு தமிழக டீம் திரும்பியிருக்கிறது. இது மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான உரசலாக மாறிவருகிறது."

**"நானும் ஒரு தகவலைப் பகிர்ந்துக்கறேன். தமிழக ஐ.ஏ.எஸ். அதிகாரி பீலா வெங்கடேசன், புற்றுநோயால் அண்மையில் காலமானார். அவரது மரணம், அதிகாரிகள் மத்தியில் மிகுந்த சோகத்தையும் கவலையையும் ஏற்படுத்தியது. பீலா காலமாகும்போது, எரிசக்தித் துறையின் முதன்மைச் செயலாளராக இருந்தார். அவரது நாற்காலி இப்போது காலியாக இருப்பதால், அதைப் பிடிக்க அந்தத் துறையில் பிரின்சிபல் செக்ரட்டரி அந்தஸ்தில் இருக்கும் அதிகாரிகள் சிலர் முயற்சித்து வருகின்றனர். அதனால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றம் விரைவில் வர இருக்கிறது என்கிறார்கள். சில அதிகாரிகளிடம் கூடுதல் பொறுப்பாக சில துறைகள் தற்போது இருக்கின்றன. ஐ.ஏ.எஸ். மாற்றத்தின்போது, இப்படி கூடுதல் பொறுப்பாக இருக்கும் துறைகளுக்கு முழுநேர அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்கிற கோரிக்கையும் இப்போது அதிகாரிகள் தரப்பில் வலுத்து வருகிறது."**

●




www.nakkheeran.in



கரூரில் நிர்மலா சீதாராமன் விசிட்டின்போது...



கரூரில் ஹேமமாலினி டீம்

# கரூரில் பா.ஜ.க. டீம்!



கரூர் பிரச்சினையில் பொறுப்புணர்வு சிறிதுமின்றி ஆணவம், திமிர் கலந்த வார்த்தைகளால் விஜய் வீடியோவில் பேசுவதைப் பார்த்தால் அவருக்கு அஸ்தமனம் ஆரம்பமாகிவிட்டது என ஆரூடம் கூறுகிறார்கள் அரசியல் வல்லுநர்கள்.

கடந்த 2024-ஆம் ஆண்டு தமிழக வெற்றிக்கழகத்தை துவங்கிய விஜய், செப்டம்பர் 13-ஆம் தேதி திருச்சியில் தொடங்கிய அவரது முதல் பிரச்சார பயணத்திலேயே கூட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் காயமடைந்தனர்.

இப்படி, நேரத்தைக் கடத்தினால் அதிக கூட்டத்தைக் காட்டலாம் என்ற விஜய்யின் பிரச்சார ஃபார்முலாவினால், அரியலூரில் 6 பேர், திருவாரூரில் 17 பேர், நாகையில் 5 பேர் எனத் தொடர்ந்து இறுதியாக செப்டம்பர் 27ஆம் தேதி சனிக்கிழமை, நாமக்கல்லில் நடந்த பிரச்சாரத்தில் 35 பேரை ஐ.சி.யூ.விற்கு அனுப்பிவிட்டு, கரூரில் ஏதுமறியாத குழந்தைகள், ரசிகர்கள், கூட்டத்தில் சிக்கிக்கொண்ட பெரியவர்கள் என 41 அப்பாவி உயிர்களை தனது அரசியல் வெறிக்கு பலிகொடுத்துவிட்டார் விஜய்.

தமிழக அரசியல் வரலாற்றில் பெரும் சோகத்தை ஏற்படுத்திய இச்சம்பவத்தையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் கமிசனை அமைத்து பாரபட்சமற்ற விசாரணைக்கு உத்தரவிட்டார்.

அதேநேரம், தன்னுடைய தொண்டர்களும் ரசிகர்களும், ஆர்வத்தில் தன்னைப் பார்க்கவந்த பொதுமக்களும் அந்த கோரச்சம்பவத்தில் உயிரிழந்ததை நேரில் கண்டும்கூட கரூரிலிருந்து அவசர அவசரமாக திருச்சி வந்து, தனி விமானம் மூலம் சென்னை திரும்பி, ஏர்போர்ட் ஊழியர்களுடன் செல்ஃபி எடுத்து, தனது பனையூர் பங்களாவிற்குள் பதுங்கிக்கொண்டார் விஜய்.

நடந்த சம்பவம் குறித்து விசாரித்து உண்மையை அறிவதற்காக டெல்லியிலிருந்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இணையமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டவர்கள் கரூர் வந்து இறங்கினர். அதற்கு முதல்நாளே, அதாவது அந்த கோரச்சம்பவம் நடந்த மறுநாளான செப்டம்பர் 28-ஆம் தேதியன்றே நீதிபதி அருணா ஜெகதீசன் சம்பவம் நடந்த கரூர் வேலுச்சாமிபுரத்திற்கும், அரசு மருத்துவமனைக்கும் நேரில்வந்து தனது விசாரணையைத் துவங்கினார். பின்னர், மறுநாள் நெரிசலில் சிக்கி உயிரிழந்த வடிவேல்புரத்தை சேர்ந்த ஒன்றரை வயது குழந்தை விமலின் பெற்றோர், அங்கிருக்கும் காவலர் குடியிருப்பைச் சேர்ந்த சுகன்யாவின் குடும்பத்தினர், 5 பேர் உயிரிழந்த ஏமூர் புதூரிலிருக்கும் குடும்பத்தினர் என உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர்களையும், சம்பவ இடத்தில் இருந்த பொதுமக்களையும், சமூக ஆர்வலர்களையும் நேரில் சந்தித்து தனது விசாரணையை தொடர்ந்து வருகிறார்.

இதற்கிடையே, 29ஆம் தேதி காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிகழ்விடத்திற்கு வந்த அதன் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், மாநில தலைவர் செல்வப்பெருந்தகை, எம்.பி.க்கள் ஜோதிமணி, விஜய் வசந்த், ராபர்ட் ப்ரூஸ் உள்ளிட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களையும்

www.nakkheeran.in




# –செந்தில்பாலாஜி பதிலடி!

பொதுமக்களையும் சந்தித்தபிறகு, நடந்த சம்பவத்திற்கு அதிக கூட்டமும், அதனால் ஏற்பட்ட கடும் நெருக்கடியுமே காரணம் எனக்கூறினர். பிரதமர் மோடியின் அறிவுறுத்தலின் பேரில் வந்ததாகக் கூறிய மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், எல்.முருகன் ஆகியோரோ, 'கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு விவகாரத்தில் யாரையும் குற்றம்சாட்ட விரும்பவில்லை' எனக் கூறியது பலருக்கும் அதிர்ச்சியை எற்படுத்தியது.

இது ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும் போதே, தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் மீதும் வழக்குப் பதிவுசெய்து அவர்களை உடனே கைதுசெய்ய வேண்டும் என்ற குரல்கள் மக்கள் மத்தியில் ஓங்கி ஒலிக்கத் துவங்கியது. இதற்கு எதிர்வினையாக சமூக வலைத்தளங்களில் அவதூறுகளை அள்ளிக்கொட்டி வதந்திகளை பரப்பத்துவங்கியது த.வெ.க.வுக்கு ஆதரவான ஒரு கூட்டம்.

இந்நிலையில்தான், கரூர் கோரச் சம்பவத்திற்கு காரணமான த.வெ.க. மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்த கரூர் நகர காவல்துறையினர், திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் பதுங்கியிருந்த மதியழகனையும், அவருக்கு அடைக்கலம் கொடுத்த பவுன்ராஜ் என்பவரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். அப்போது நடந்த விசாரணையின்போது, கரூர் நீதிபதி பரத்குமார், கைதுசெய்யப்பட்ட அந்த இருவரையும் 15 நாட்கள் சிறையிலடைக்க உத்தரவு பிறப்பித்தார்.

செப்டம்பர் 30 அன்று இந்த நீதிமன்ற விசாரணை நடந்துகொண்டிருந்தபோதே டெல்லியிலிருந்து என்.டி.ஏ. கூட்டணி சார்பாக கரூர் வந்த பா.ஜ.க. எம்.பி. ஹேமமாலினி, சிவசேனா எம்.பி. ஸ்ரீகாந்த் ஷிண்டே உள்ளிட்ட 8 பேர் கொண்ட குழு சம்பவ இடத்திற்கு வந்து அங்கிருந்தவர்களை விசாரிக்கத் துவங்கியது. நடிகர் விஜய் தாமதமாக வந்ததும், அதிக கூட்டமும், கூட்டத்திற்கு வந்திருந்த த.வெ.க. தொண்டர்களின் அத்துமீறலுமே காரணம் எனக் கூற, முகம்சுருங்கியபடி அதை அப்படியே ஹேமமாலினிக்கு ஆங்கிலத்தில் எடுத்துச் சொன்னார் அ.மலை.

கரூர் கொடூர சம்பவத்திற்குப் பிறகு, 3 நாட்களாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலோ, அறிக்கையோ விடாமல் பதுங்கியிருந்த த.வெ.க. தலைவரும் நடிகருமான விஜய் வீடியோ மூலமாக பொதுவெளிக்கு வந்தார்.

அந்த 4 நிமிட வீடியோவில், வரவழைக்கப்பட்ட சோகமுகத்துடன் பேசிய அவர், எந்த இடத்திலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூடக் கூறாமல், '5 பிரச்சார இடங்களுக்கு சென்றிருக்கிறேன். அங்கு எல்லாம் ஒன்னுமே நடக்கல...' என அப்பட்டமாக பொய் கூறியதோடு, 'சி.எம். சார், உங்களுக்கு பழி வாங்கவேண்டும் என்ற எண்ணமிருந்தால் என்னை என்ன வேண்டுமானாலும் பண்ணுங்க' என முதல்வர் ஸ்டாலினுக்கு எச்சரிக்கைவிடும் தொனியில் பேசினார். அவரின் இந்தப் பேச்சு விஜய்யின் கரூர் பிரச்சாரத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பாதிக்கப்பட்டவர்களை மட்டுமல்லாமல் த.வெ.க. ஆதரவாளர்கள் மத்தியிலும், கடும் விமர்சனத்தை ஏற்படுத்திய நிலையில்தான், விஜய்யின் அந்த பொறுப்பற்ற பேச்சுக்கு பின்னணியில் இருப்பது பா.ஜ.க.தான் என அடித்துக்கூறுகின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

இதுகுறித்து தமிழ்நாட்டு அரசியலையும், விஜய்யின் வியூகங்களையும் அருகிலிருந்து கவனித்துவரும் சிலரிடம் பேசினோம். "குற்றம்சாட்டப்பட்ட ஒருவரையே யாராவது

www.nakkheeran.in

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே
மருத்துவமனையில் அனுமதி



கைதான
மதியழகன், பவுன்ராஜ்

உண்மை கண்டறியும் குழுவிற்கு அழைப்பார்களா? ஆனால், என்.டி.ஏ. சார்பாக வந்த உண்மை கண்டறியும் குழு செய்தியாளர்களிடம் பேசும்போதே, த.வெ.க. தலைவர் விஜய்யும் எங்களுடன் இணைந்து கொள்ளவேண்டும் எனக்கூறியதிலிருந்தே விஜய்யைக் காப்பாற்ற அவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்பது தெரியவில்லையா?'' என நம்மிடமே கேள்வி கேட்டனர்.

மேலும், "கலவர பூமியான மணிப்பூருக்கு செல்லாத உண்மை கண்டறியும் குழுவினர் கரூருக்கு வந்ததே விஜய்யை காப்பாற்றத்தான். கடந்த 29-ஆம் தேதி அதிகாலையில் பனையூர் பங்களாவிலிருந்து பட்டினப்பாக்கத்திலுள்ள தனது மற்றொரு இல்லத்திற்கு செல்வதற்கு முன்னரே, ஆடிட்டர் குருமூர்த்திக்கு நெருக்கமான பா.ஜ.க.வின் அரசியல் புரோக்கர்கள் சிலர் அங்கு வந்துவிட்டனர். அவர்களுடன், டீலிங் முடிந்தபிறகுதான் மீண்டும் பனையூருக்குத் திரும்பினார் விஜய். 30-ஆம் தேதி அவர் வெளியிட்ட வீடியோவும், அந்த பா.ஜ.க.வினரின் ஸ்கிரிப்ட்படி, அவர்களின் முன்னிலையிலேயே பட்டினப்பாக்கம் இல்லத்தில் வைத்து ஷூட் செய்யப்பட்டதுதான். அதைத்தான் அடுத்த நாள் மாலை வெளியிட்டார் விஜய். அப்போது, பா.ஜ.க.வின் முக்கிய புள்ளி ஒருவரும் விஜயுடன் அலைபேசியில் பேசியதாகவும் தகவல். தற்போது, த.வெ.க.வின் இரண்டாம் கட்ட தலைவர்கள் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட உள்ள நிலையில், விரைவில் விஜய் டெல்லிக்கு செல்லவும் வாய்ப்பிருக்கிறது'' என ஷாக் கொடுத்தனர் நம்மிடம்.

இந்நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்த முன்னாள் அமைச்சரும், கரூர் எம்.எல்.ஏ.வுமான செந்தில்பாலாஜி, இந்த விவகாரம் குறித்து வீடியோ ஆதாரங்களுடன் விளக்கமளித்தார்.

இதுகுறித்து அவர் பேசுகையில், கரூர் துயர சம்பவம் மிகக் கொடுமையானது, உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சம்பவம் நடந்த உடனே முதல்வர் நேரில்வந்து ஆறுதல் தெரிவித்தார். கரூர் மக்களுக்கு ஆதரவாக இருந்த அனைத்து அரசியல் தலைவர்களுக்கும் நன்றி.

"கடந்த 3 நாட்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தெரிவித்து வருகிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்துள்ளோம். நான் கரூரைச் சார்ந்தவன், எனது தொகுதி மக்களை எனது சொந்தங்களாக கருதுபவன். அவர்களின் ஒவ்வொரு நல்லது கெட்டதிலும் நான் நிற்கின்றேன். ஆகவே இந்த துயர சம்பவத்தில் முதல் ஆளாகச் சென்று உதவிகளை செய்திருக்கின்றேன். அனைத்துக் கட்சியினரும் வேறுபாடுகளின்றி உதவிசெய்தனர்.

த.வெ.க. கூட்டத்தில் எங்கேயாவது தண்ணீர் பாட்டில் இருந்ததா? ஒரு பிஸ்கட் பாக்கெட்டாவது இருந்ததா? அந்த இடத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட செருப்புகள்தான் மிஞ்சியது. காலையிலிருந்து அவர்கள் காத்திருந்தனர். அங்கு குறித்த நேரத்தில் விஜய் வந்திருந்தால் இந்த பிரச்சினையே ஏற்பட்டிருக்காது. விஜய் கூட்டத்திற்கு வந்தவர்கள் கட்டுப்பாடற்றவர்கள். ஒரு தவறு நடந்தால் அதற்கு சம்பந்தப்பட்டவர்கள்தான் பொறுப்பேற்கவேண்டும். ஓடி ஒளியக்கூடாது'' என்றார்.

பாட்டிலுக்கு பத்து ரூபாய் என விஜய் விமர்சித்தது பற்றிய கேள்விக்கு, ''அந்த சம்பவங்கள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற சம்பவம். அதற்கு எடப்பாடி பழனிச்சாமியே பொறுப்பேற்கவேண்டும். அந்த பத்து ரூபாய் கூடுதல் தொகை எடப்பாடிக்குதான் சென்றது. எனக்கு யாரும் சான்றிதழ் கொடுக்க வேண்டாம்'' என்றும் விளக்கமளித்தார்.

**-துரை.மகேஷ்**



மும்பையில் பாலியல் தொழிலாளி கழுத்தை நெரித்துக் கொலை - ஆட்டோ டிரைவர் கைது

# தலைமுறைகள் தாண்டி தலைசிறந்த சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300

7 தலைமுறைகள், 213 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

**தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை**



Dr.சிவராஜ் சிவகுமார்

## சென்னை கிளை

10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில்,
VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம்,
சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

## ஈரோடு கிளை

பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில்,
கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர்,
வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

## ஒசூர் கிளை

M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம்
அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

## திருப்பத்தூர் கிளை

88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

**ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)**

### திருச்சி
1ம், 9ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் அபிராமி
சென்ட்ரல் பஸ்நிலையம்,
பெரியார் சிலை அருகில்.

### திருப்பூர்
1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை
14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
SAP ரெஸிடென்ஸி
111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

### தஞ்சை
2ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காசி இன்
1493, தெற்கலங்கம்,
பழைய பேருந்து நிலையம்.

### கும்பகோணம்
2ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் திருமால்
ஜான்செல்வராஜ் நகர்,
புதிய பஸ்நிலையம் அருகில்.

### நாகர்கோவில்
2ம் தேதி,
காலை 6 முதல் மாலை 5 வரை,
ஹோட்டல் கங்கா பேலஸ்
K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

### நெல்லை
3ம், 23ம் தேதியும்,
காலை 6 முதல் மாலை 5 வரை,
பரணி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

### விழுப்புரம்
3ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஆதித்யா
தேர் விநாயகர் கோவில் &
புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

### காஞ்சிபுரம்
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
வசந்த் வில்லா
T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை &
பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

### மதுரை
4ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
காலேஜ் ஹவுஸ்
டவுன் ஹால் ரோடு.

### கள்ளக்குறிச்சி
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
AKT லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

### தேனி
7ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்
பழைய பஸ் நிலையம் அருகில்,
மதுரை ரோடு.

### திண்டுக்கல்
8ம், 24ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஐஸ்வர்யா
ஸ்பென்ஸர் காம்பௌண்ட்,
பஸ் நிலையம் எதிரில்.

### திருவண்ணாமலை
9ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

### வேலூர்
11ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்
3, தென்னைமரம் தெரு.

### கடலூர்
11ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் CAR லாட்ஜ்
62, லாரன்ஸ் ரோடு.

### சிதம்பரம்
11ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஜெயராம்
35, 36, SP கோயில் தெரு.

### மாயவரம்
12ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
அல்-முஜம்மில் லாட்ஜ்
பழைய பஸ்நிலையம் அருகில்.

### நாகப்பட்டினம்
12ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
நியூ குமார் லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

### மன்னார்குடி
13ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காவேரி லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

### புதுக்கோட்டை
13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை
26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ராயல் பார்க்
புதிய பஸ்நிலையம் எதிரில்.

### கோவை
13ம், 26ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
OYO ROOMS (கோடா ஓட்டல்)
294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

### கரூர்
14ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஆர்த்தி ஹோட்டல்
தின்னப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

### புதுவை
16ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி
பஸ் நிலையம் எதிரில்.

### தென்காசி
18ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்
2, பழைய பஸ் நிலையம் ரோடு.

### கிருஷ்ணகிரி
20ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்
239, பெங்களூர் ரோடு.

### ஆரணி
21ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

### ராம்நாடு
24ம் தேதி
காலை 6 முதல் மாலை 5வரை
ஹராஜா பேலஸ்
துரைராஜ் சத்திரம் வீதி.

### சிவகாசி
25ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
மணீஸ் லாட்ஜ்
பஸ் நிலையம் பின்புறம்.

### பொள்ளாச்சி
27ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
சக்தி ஹோட்டல்
144, கோவை ரோடு.

### மேட்டுப்பாளையம்
28ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் காவேரி
K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை ஆன்லைன் மூலம் பெற www.sivarajsiddha.com

G Pay Paytm 98427 22500



7 தலைமுறைகள்,
213 வருடங்கள்
பாரம்பரியம் கொண்ட
நிறுவனம்.

for more details

Advt

# உறுப்பினர் சேர்க்கையில் டிஜிட்டல் மோசடி! பா.ஜ.க.வில் பகீர்!

பா.ஜ.க. உறுப்பினர் சேர்க்கையில் டிஜிட்டலாக பிராடு வேலை செய்து பதவிக்கு வந்துள்ளார்கள் என்று பா.ஜ.க. பிரமுகரே குற்றம்சாட்டியிருப்பது அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் உட்கட்சி தேர்தல் கடந்த ஆண்டு நடைபெற்றது. அதில் ஒன்றிய தலைவர் தேர்வில் மோசடி நடந்துள்ளது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து திருப்பத்தூர் கிழக்கு ஒன்றிய முன்னாள் பொதுச்செயலாளர் மிட்டூர் விவாகர், “எங்கள் கட்சியில் கடந்த 2024ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. இந்த மாவட்டத்துக்கு கட்சியின் மாநில துணைத்தலைவராக இருந்த சக்கர வர்த்தி, மாவட்ட தேர்தல் அதிகாரியாக நியமிக்கப் பட்டார். திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் 8 பஞ்சாயத்துகளில் 48 பூத்துகள் உள்ளன. பூத் கமிட்டி தலைவர்கள் வாக்களித்து தான் ஒன்றியத்தலைவர் தேர்வு செய்யப்படுவார். ஒரு பூத்துக்கு 50 பேரை உறுப்பினராக்க வேண்டும். கிழக்கு ஒன்றியத்தில் 48 பூத்துகளில் 10 பூத் தவிர மற்றவற்றில் உறுப்பினர்களே இல்லையென்பதால் உறுப்பினர் சேர்க்கை நடத்தப்பட்டது. எங்கள் கட்சியில் உறுப்பினர் சேர்க்கைக்கு ஒரு மொபைல் எண் தந்துள்ளார்கள். அதற்கு மிஸ்டுகால் தந்தால் அடுத்த சில நொடிகளில் ‘இணைந்தமைக்கு நன்றி’ எனச் சொல்லி உறுப்பினர் சேர்க்கை எண் வரும். அந்த எண்ணை உறுப்பினர் சேர்க்கை படிவத்தில் குறிப்பிட்டு, அதை மாவட்ட அலுவலகத்தில் தந்தால் உறுப்பினரின் பெயரிலிருக் கும் லாகின், பாஸ்வேர்டை ஓப்பன் செய்து இணைப்பார்கள். பெருமாப்பட்டு கிராமத் தை சேர்ந்த சக்தி கேந் திரா பொறுப்பாளர்



பாரதிய ஜனதா கட்சி - தமிழ்நாடு
BHARATIYA JANATA PARTY, TAMILNADU
Phone : 2436 9800, 2434 3444, 2432 7373 Fax : 044 - 2432 1771

தேதி : 05.09.2025

M.சக்கரவர்த்தி
மாநில துணைத் தலைவர்
மாநில தேர்தல் அதிகாரி

அமைப்பு பருவம் - 2024

மண்டல் தேர்தல் முடிவுகள் அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டத்தில் மண்டல் தலைவர்களுக்கான தேர்தல் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல் தலைவரின் விவரம் அறிவிக்கப்படுகிறது. மண்டல் தேர்தல்களை சிறப்பான முறையில் நடத்திக் கொடுத்த தேர்தல் பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு மாவட்ட மையக்குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல் தலைவர்கள்

| வ.எண் | மண்டல் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல் தலைவர் |
|---|---|---|
| 1 | திருப்பத்தூர் கிழக்கு | V.மூர்த்தி |

புதிதாக பொறுப்பேற்கும் மண்டல் தலைவர் அவர்கள் சிறப்பாக பணியாற்றி கட்சியினை வெற்றிப்பாதையில் முன்னெடுத்து செல்ல மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் தேசப்பணியில்
(M.சக்கரவர்த்தி)

மூர்த்தி நியமன அறிவிப்பு



பாரதிய ஜனதா கட்சி - தமிழ்நாடு
BHARATIYA JANATA PARTY, TAMILNADU
Phone : 2436 9800, 2434 3444, 2432 7373 Fax : 044 - 2432 1771

M.சக்கரவர்த்தி
மாநில துணைத் தலைவர்
மாநில தேர்தல் அதிகாரி

தேதி : 05.09.2025

அமைப்பு பருவம் - 2024

மண்டல் தேர்தல் முடிவுகள் அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டத்தில் மண்டல் தலைவர்களுக்கான தேர்தல் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல் தலைவரின் விவரம் அறிவிக்கப்படுகிறது. மண்டல் தேர்தல்களை சிறப்பான முறையில் நடத்திக் கொடுத்த தேர்தல் பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு மாவட்ட மையக்குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல் தலைவர்கள்

| வ.எண் | மண்டல் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல் தலைவர் |
|---|---|---|
| 1 | திருப்பத்தூர் கிழக்கு | S. ராஜா |

புதிதாக பொறுப்பேற்கும் மண்டல் தலைவர் அவர்கள் சிறப்பாக பணியாற்றி கட்சியினை வெற்றிப்பாதையில் முன்னெடுத்து செல்ல மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் தேசப்பணியில்
(M.சக்கரவர்த்தி)

மாநில தலைமை அலுவலகம்: 'கமலாலயம்', எண். 19, வைத்தியராம் தெரு, தி.நகர், சென்னை - 17.
State Head Office: "KAMALALAYAM", No. 19, Vaidyaram Street, T.Nagar, Chennai - 17.

ராஜா நியமன அறிவிப்பு



மிட்டூர் விவாகர்

ராஜா, மூர்த்தி இருவரும் ஒன்றிய தலைவராக வேண்டுமென 48 பூத்துகளில் பூத் கமிட்டி அமைக்க முயற்சி செய்தார்கள். ஆனாலும் 28 பூத்துகளில் உறுப்பினர் சேர்க்கையே இல்லை. இந்நிலையில் மூர்த்திக்கு கிழக்கு ஒன்றிய தலைவர் பதவி தரப்பட்டுள்ளது. அதோடு கட்சிக்கான உறுப்பினர் சேர்க்கையில் டிஜிட்டல் சீட்டிங் நடந்தி பொறுப்புக்கு வந்துள்ளார்" என்றார்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய ராஜா, "நான் 3 வருடத்துக்கு மேலாக பா.ஜ.க.வில் உள்ளேன். கடந்தாண்டு தேர்தலுக்கு 6 மாதத்துக்கு முன்பு மூர்த்தியை கட்சிக்கு அழைத்துவந்தேன். கட்சிக்காக தீவிரமாக உழைத்த என்னாலே 25 பூத்துகளில் உறுப்பினர்களை சேர்க்க முடியவில்லை. எங்கள் ஒன்றியம் உட்பட தமிழ்நாடு முழுவதும் 40 சதவீத பொறுப்புகளுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. 2025, மே மாதம், புதிய மாவட்டத் தலைவராக தண்டாயுதபாணி நியமிக்கப்பட்டார். அதன்பின் மாவட்டத்தில் காலியாக உள்ள ஒன்றியங்களுக்கு நிர்வாகிகள் நியமனம் நடைபெற்றது. என்னால் கட்சிக்கு கொண்டுவரப்பட்ட மூர்த்தி, புதிய மாவட்ட தலைவரிடம் 26 பூத்துகளில் உறுப்பினர் சேர்க்கையை அவர் நடத்தியதாக பட்டியல் தந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதை 6 மாதமாக ஆய்வு செய்ததில், ஊட்டி, கோவை, ஈரோட்டிலிருந்தெல்லாம் உறுப்பினர்களின் மொபைல் எண்களிலிருப்போர் பேசுகிறார்கள். இப்படி 800 பேரை சோதித்ததில், 150 பேர்தான் ஒன்றியத்திற்கு உள்ளிருக்கும் பூத்தை சேர்ந்தவர்கள். மற்றவர்கள் போர்ஜரி. இதில் தாசில்தார், மாற்றுக்கட்சியினரின் மொபைல் எண்கெளெல்லாம் இருக்கு. அவர்களிடம் பேசினால், நான் எதுக்கு கட்சியில் சேரப்போறேன் என்றெல்லாம் கேட்கிறார்கள். தீவிரமாக விசாரித்ததில், மூர்த்தி வைத்துள்ள நெட் சென்டரில் ரீசார்ஜ் செய்ய வருபவர்களின் நம்பரிலிருந்து மிஸ்டுகால் மோசடி செய்திருக்கிறார்கள். இதேபோல் வடநாட்டினரின் மொபைலையும் தவறா பயன்படுத்தியிருக்காங்க.



தண்டாயுதபாணி



ராஜா

இதுகுறித்து தலைமையிடம் சொன்னால், மாவட்ட தலைவரிடம் சொல்லச்சொன்னார்கள். அவரோ, அதெல்லாம் விடு, உனக்கென்ன பதவி வேணும்னு சொல்லு என்கிறார்.

பழைய மாவட்ட தலைவர் வாசுதேவன், என்னை ஒன்றியத்தலைவர் பதவியில் நியமிக்கச் சொல்றேன்னு சொல்லி, என்னிடமிருக்கும் டாகுமென்டுகள், ஒரு லட்ச ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டு, ஒன்றியத்தலைவரா நியமிச்சதா ஒரு கடிதம் தந்தார். அதேநாள் மாலையில், மூர்த்தியிடம் 2 லட்சத்தை வாங்கிட்டு அவருக்கும் அதே பதவியை தர்றதா கடிதம் கொடுத்திருக்காங்க. மாவட்டத் தலைவரிடம் கேட்டாலோ, டிஜிட்டல் முறையில் சீட்டிங் செய்து பதவி வாங்கியிருக்கான்னு சொல்லிட்டார். அதுக்கு மாவட்ட தலைவரிலிருந்து பலரும் உடந்தையா இருக்காங்க" என்றார் குற்றச்சாட்டாக.

இதுகுறித்து திருப்பத்தூர் மாவட்ட பா.ஜ.க. தலைவர் தண்டாயுதபாணியிடம் கேட்டபோது, "அவர் சொல்லும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானது. உறுப்பினர் சேர்க்கை முறையாக நடந்துள்ளதா என ஆய்வு நடத்த மாநிலக்குழு வரும், அந்த குழுவிடம் இவர் சொல்லலாம், அதை யாரும் தடுக்கப்போவதில்லை. பணம் வாங்கிக்கொண்டு பதவி போட்டார்கள் எனச்சொல்வது பொய். அவர்தான், தலைமை மூர்த்திக்கு தந்த கடிதத்தில் மூர்த்தி பெயரை எடிட் செய்து தன் பெயரை சேர்த்து பரப்பிக்கொண்டு இருக்கிறார். அதுகுறித்து காவல்துறையில் புகாரும் தரப்பட்டுள்ளது. அவர் இப்போது கட்சியில் எந்த பொறுப்பிலும் இல்லை" என்கிறார் அதிரடியாக.

ஓட்டு திருட்டு என பா.ஜ.க. மீது காங்கிரஸ் குற்றஞ்சாட்டிவரும் நிலையில், பா.ஜ.க.வில் பதவிக்காக திருட்டு உறுப்பினர் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

**-து.ராஜா**

www.nakkheeran.in




உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி

**நடேஷ்கன்னா, கல்லிடைக்குறிச்சி**

**பீகார் தேர்தலில் பா.ஜ.க. இலவசங்களை அள்ளிவீசுகிறதே?**

அதுதான் உச்சநீதிமன்றத்துக்குப் போய், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கவும் நீக்கவும் வழியில்லாமல் செய்துவிட்டார்களே. அதனால் பெண்கள் தொழில் செய்வதற்கு 50,000 ரூபாய். அதைத் திருப்பிக்கொடுக்கவும் தேவையில்லை என்று மாநில அரசின் பணத்தையெடுத்து வோட்டுக்கு நோட்டுக் கொடுத்து வாக்குகளை அள்ளத் திட்டமிடுகிறார்கள்.

**என்.இளங்கோவன், மயிலாடுதுறை.**

**ரஷ்யாவுடனான போர் முடிந்தவுடன் பதவி விலகிவிடுவேன், மீண்டும் தேர்தலில் நிற்கமாட்டேன் என்று கூறுகிறாரே உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி..?**

அதை இரண்டுவிதமாகவும் பார்க்கலாம். எனக்கெல்லாம் அதிகாரத்தில், பதவியில் ஆசையில்லை. இக்கட்டான சமயத்தில் நாட்டுக்குத் துணை நின்றதே போதுமானது என்ற செய்தியாகவும் பார்க்கலாம். ரஷ்யா போட்ட குண்டுகளில் நாடே சல்லடைக் கண்ணாய் துளைக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நாட்டை மீட்டெடுத்து பழைய நிலைக்குக் கொண்டு வருவது, மலையுச்சிக்கு பாறாங்கல்லை உருட்டிச்செல்லும் சிசிபஸின் வேலை! அதை எவனாவது பார்த்துக் கொள்ளட்டும். என்னை விடுங்கள்! இரண்டும் இருக்கட்டும். உக்ரைனில்

www.nakkheeran.in

போர் முடிந்தாலல்லவா இதையெல்லாம் யோசிப்பதற்கு.

**தே. மாதவராஜ், கோயம்பத்தூர்-45**

**முழுநேர அரசியல்வாதியான பிறகும் பத்திரிகையாளர்களை சந்திக்க விஜய் மறுப்பதற்கு காரணம்?**

எழுதிக் கொடுத்ததைப் பேசுவதற்குள்ளேயே வாய் குழறுகிறது. சொந்தமாகத் தடுமாற்றமில்லாமல் பேசவேண்டுமானால் நாட்டில் என்ன நடக்கிறது, மத்திய, மாநில அரசுகள் என்னென்ன செய்கிறது என்ற தெளிவுவேண்டும். நாட்டின் பிரதமராக ஆனவருக்கே, பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னும் பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் துணிச்சல் வரவில்லை. விஜய்யிடம் அதை எதிர்பார்ப்பது டூமச்தான்.

**அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.**

**ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரருடன் கைகுலுக்க இந்திய வீரர்கள் மறுத்தது சரியா?**

பாகிஸ்தானுடன் விளையாடவே மாட்டோம் என ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பது ஒருவகை. இதென்ன... விளையாடுவோம், கைகுலுக்கமாட்டோம், பாகிஸ்தான் அமைச்சர் கையால் கோப்பை தந்தால் வாங்கமாட்டோம் என்று இரண்டும்கெட்டான் நிலைப்பாடாக இருக்கிறது. இரு தரப்பிலும் புண்ணை நோண்டிக்கொண்டே இருக்கிறார்களே தவிர, மருந்து தடவி ஆற வழிவகை செய்யமாட்டேன் என்கிறார்கள்.

**ஜெ. மணிகண்டன், பேரணாம்பட்டு**

**கடவுள் என்ன ஆனார் என நடிகர் விஜய் ஆண்டனி காஸாவின் நிலைமையைப் பார்த்து கண்கலங்கிக் கேட்கிறாரே?**

கடவுளா பாலஸ்தீனத்தின் நடுவில் இஸ்ரேலை உருவாக்கினார்? கடவுளா பாலஸ்தீனமும் இஸ்ரேலும் மோதிக்கொள்ள பகையை மூட்டினார்? இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாக கடத்தியது ஹமாஸா... கடவுளா? இந்தப் பூமியில் இதுவரை நடந்த எந்தப் போரிலும் கடவுள் இறங்கிவந்து மத்தியஸ்தம் செய்ததில்லை... போரை நிறுத்தியதில்லை... இரத்த ஆறுகளுக்கு அணை கட்டியதில்லை. ஏதாவது நடக்கவேண்டுமென்றால், உலக நாடுகள் ஒருங்கிணைந்து அமெரிக்காவையும், இஸ்ரேலையும் நெருக்கினால்தான் உண்டு. ஆனால் அதைச் செய்ய எந்த நாட்டுக்கும் தெம்பு இல்லை. பிறகு அவரும் நாமும் கண்கலங்கிக்கொண்டே இருக்கவேண்டியதுதான்.

**வண்ணை கணேசன், கொளத்தூர்**

**நமக்கும் கீழே உள்ளவர் கோடி என்று யாரும் நினைப்பதில்லையே ஏன்?**

எல்லோரும் நமக்கு மேலுள்ள, கோடிகளை வைத்திருக்கும் பணக்காரர்களை பார்த்து ஏக்கத்தில் இருப்பதால், நமக்குக் கீழும் மோசமான நிலையிலுள்ள கோடிக்கணக்கானவர்களைப் பார்த்து ஆறுதலடைவதில்லை.

**எஸ். பூவேந்தஅரசு, சின்னதாராபுரம்**

**எம்.பி. தேர்தலில் தனித்து நின்றுவிட்டு எம்.எல்.ஏ. தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வைத்துள்ளதே?**

அது எம்.பி. தேர்தல் தமிழகத்தில் ஜெயிக்காவிட்டால்கூட வடக்கில் ஜெயித்து சமாளித்துவிடலாம் என்ற துணிச்சலிலும், ஒரு முன்னாள் ஐ.பி.எஸ்.ஸின் யோசனையின் பெயரிலும் களமிறங்கி சூடு போட்டுக்கொண்டது. இன்னும் அந்தத் தழும்பே மாறாமல் இருப்பதால், புதிய தழும்போ, சூடோ தேவையில்லையென இம்முறை அ.தி.மு.க.வை நெருக்கி கூட்டணியுடன் களமிறங்கத் திட்டமிட்டுள்ளது.

**எஸ். அர்ஷத் ஃபயாஸ், குடியாத்தம்**

**வெளிநாட்டில் தயாரிக்கப்படும் அனைத்து திரைப்படங்களுக்கும்.. அமெரிக்காவில் 100% வரி விதிக்கப்படும் என்ற ட்ரம்பின் அறிவிப்பு..?**

வழியில் போகிறவர்களைக் கடிக்கும்போதே நாய்க்குச் சொந்தக்காரன் சுதாரிக்கவில்லையென்றால், அது வீட்டிலுள்ளவர்களையும் கடிக்கும். அதாவது அமெரிக்காவுக்கு வெளியில் போய் தயாரிக்கப்படும் ஹாலிவுட் படங்களுக்கான வரி. இது அமெரிக்கர்களுக்கான தலைவலி. •

# வெளிநாட்டு சொகுசு கார் கடத்தல்! விசாரணை வளையத்தில் சினிமா பிரபலங்கள்?


பிரித்விராஜ்


அமித் சக்கலக்கல்

**1980**-களில் தமிழ் சினிமா பிரபல இயக்குனரும் நடிகருமான ஒருவர், அந்த காலகட்டத்தில் வெளிநாட்டுக் கார்களை சுங்கத்துறை அதிகாரிகள் கண்ணில் மண்ணைத் தூவி கடத்திவந்து விற்பனை செய்வதில் பிரபலமாக இருந்தார். அதே பாணியில் தற்போது வெளிநாட்டு சொகுசு கார்களை, அண்டை நாடான பூட்டானிலிருந்து கடத்திவந்து, இந்தியாவின் இமாச்சலபிரதேச மாநிலத்தில் முறைகேடாக பெயர்மாற்றம் செய்து, நாடு முழுவதும் அந்த கார்களை ஹவாலா பணம் மற்றும் தங்கப் பரிவர்த்தனை மூலம் விற்பனை செய்துவந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இந்தியாவில் வெளிநாட்டு சொகுசு கார் இறக்குமதி செய்ய, 160 சதவீதம் வரை வரிவிதிக்கப்படுகிறது. அண்டை மாநிலமான பூட்டானில் வெளிநாட்டு சொகுசு கார்களுக்கு வரி மிக மிகக் குறைவு. இதனால் வெளிநாட்டு சொகுசு கார்களை பூட்டான் வழியாக இந்தியாவுக்குள் சட்டவிரோதமாகக் கடத்திவரும் தகவல் இந்திய சுங்கத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளது. வெளிநாட்டு சொகுசு கார்கள் இந்திய -பூட்டான் எல்லை வனப்பகுதியை ஒட்டிய பாதையில் கடத்திவருவதும், உதிரி பாகங்களாகப் பிரித்து பிறகு இந்தியாவுக்குள் கொண்டுவந்து அசெம்பிள் செய்து முழு காராகவும், அதன் ஆவணங்களை முறைகேடாக மாற்றியும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கண்டெய்னர் லாரி மூலமாகவும் கடத்தி வரப்படுகின்றதாம்.

இந்திய, வெளிநாட்டு தூதரக அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் பெயரில் போலியான முத்திரைத்தாள்கள், போலி முத்திரைகள், போலி ஆவணங்கள் மூலம் அந்த கார்கள் பூட்டானிலிருந்து வாங்கப்பட்டதாக, இமாச்சலப் பிரதேசத்திலுள்ள போக்குவரத்து அலுவலகங்களில் பதிவுசெய்யப்படுகின்றன.


துல்கர்சல்மான்

அதில் வரி ஏய்ப்பு செய்வதோடு சட்டவிரோத பணப் பரிமாற்றங்களும் நடக்கின்றன என்ற தகவல் கிடைத்துள்ளது. இதனால் இந்திய சுங்கத்துறை அதிகாரிகள் ஆபரேஷன் 'நும்கூர்' என்ற பெயரில் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நும்கூர் என்றால் பூட்டானின் சோங்கா மொழியில் வாகனம் என்று அர்த்தம்.

இந்த ஆபரேஷன் நும்கூர் குறிப்பாக கேரளாவில் தீவிரமாக நடத்தப்பட்டது. அதில் கேரளாவில் மட்டும் 200 கார்கள் பயன்பாட்டில் இருக்கலாம் என்ற ரகசிய தகவல் சுங்கத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளது. அதன்பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை கொச்சின், திருவனந்தபுரம், கோழிக்கோடு, மலப்புரம், குட்டிபுரம், திருச்சூர் ஆகிய இடங்களில் அதிரடியாக ஆபரேஷன் நடத்தப்பட்டது. கேரள போக்குவரத்து ஆணையம்.. தனிக்குழு, தீவிரவாத எதிர்ப்புப் படை, மாநில போலீசார் இணைந்து 30-க்கும் அதிகமான இடங்களில் அதிரடி சோதனைகளை நடத்தினர்.

குறிப்பாக பிரபல நடிகர் பிரித்விராஜ் வீட்டில் நடத்திய சோதனையில் கார்கள் சிக்காத நிலையில், அவர் வைத்திருந்த மற்ற கார்களின் டாக்குமெண்ட்களை வழங்குமாறு சுங்கத்துறை அதிகாரிகள் கேட்டுள்ளார்கள். மம்மூட்டியின் மகன் துல்கர் சல்மான் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் இரண்டு வெளிநாட்டு சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதற்கு துல்கர் சல்மான் தரப்பில் கேரள உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் ஆர்.பி.புரமோட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து ஐந்து வருடங்களுக்கு முன்பு இந்த கார்கள் வாங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கிலிருந்து விடுவிக்குமாறு மனு செய்துள்ள நிலையில், இந்த விசாரணை அடுத்த வாரம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. மூன்றாவதாக நடிகர் அமித் சக்கலக்கலுக்கு சொந்தமான இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் 6 வெளிநாட்டு சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில் 5 கார்கள் ஆல்ட்ரேஷன் செய்ய கொண்டுவரப்பட்டதாகவும், ஒரு கார் மட்டும் அவருடையது என்றும் தெரிவித்துள்ளார். அவரின் சமூக வலைத்தளத்தில் பல வெளிநாட்டு சொகுசு கார்களுடன் சாகசம் செய்யும் பதிவுகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில், கோவையைச் சேர்ந்த தமிழ் நடிகரும் பாடகருமான ஒருவரின் பெயர் அடிபடுவதாகவும் கோவையை சேர்ந்த அன்டர்கிரவுண்ட் நெட்வொர்க் குறித்து திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், உளவுத்துறை மூலம் அவர்களைக் கண்காணித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, தேசிய அரசு போக்குவரத்து ஆணையத்திற்குச் சொந்தமான பரிவாகன் வெப்சைட்டை தவறாக முறைகேடாகப் பயன்படுத்தியதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதில் 2016-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஒரு காரின் விவரம் 2005-லிருந்து பயன்படுத்துவதாக மோசடியாக தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் தேசிய அளவில் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருப்பதுகண்டு உள்துறை அதிகாரிகள் அதிர்ச்சியடைந்து உள்ளார்கள்.

இந்த சோதனையைப் பற்றி கேரள மாநிலம் கொச்சின் சுங்கத்துறை கமிஷனர் திஜு தாமஸ், "இந்தக் கடத்தல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட கார்கள் பல மாநிலங்களில் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது 36 கார்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவையனைத்தும் சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் பல விதிகளை மீறியதாக உள்ளன. கைப்பற்றப்பட்ட வாகனங்கள் எல்லாம் சட்டவிரோத பணப் பரிவர்த்தனைகள் மூலமாக வாங்கப்பட்டுள்ளதா என ஆராய்ந்து வருகிறோம்" என தெரிவித்தார்.

**-அரவிந்த்**





'ஐ லவ் முகமது' போராட்டக்காரர்கள் மீது லத்தியடி

# சர்ச்சையில் 'ஐ லவ் முகமது' ஊர்வலங்கள்!

வட இந்தியாவில் புதிதாக ஒரு பிரச்சனை வெடித்திருக்கிறது. இந்துக்கள் கிருஷ்ண ஜெயந்தி, அனுமன் ஜெயந்தி கொண்டாடுவது போல் இஸ்லாமியர்களும் இஸ்லாமின் தூதரான முகமது நபி பிறந்த நாளை மிலாடி நபியாகக் கொண்டாடுகின்றனர். செப்டம்பர் 5-ஆம் தேதி கொண்டாடப்படும் மிலாடி நபி விழாவுக்காக, செப்டம்பர் 4-ஆம் தேதி உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூர் அருகேயுள்ள ரவாத்பூர் கிராம மக்கள், 'ஐ லவ் முகமது' என்ற வாசகம் அச்சிட்ட பேனருடன் ஊர்வலமாகச் சென்றுள்ளனர்.

இதற்கு அக்கிராமத்திலுள்ள இந்துத்துவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், ஊர்வலத்தில் இருந்தவர்களையும், பேனர்களையும் தடியால் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். உத்தரப்பிரதேச காவல்துறை இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட 21 பேர் மீது வழக்குப் பதிவுசெய்தது.

இதையடுத்து இந்த விவகாரம் உத்தரப்பிரதேசம் முழுவதும் பரவிய நிலையில், 'ஐ லவ் முகமது' பேனர்களையும், போஸ்டர்களையும் மாநிலம் முழுவதும் பலரும் ஒட்டியிருக்கின்றனர். விவகாரம் மாநிலத்தைத் தாண்டி மகாராஷ்டிரா, தெலுங்கானா, உத்தரகாண்ட் மாநிலங்களுக்கும் பரவியிருக்கிறது.

உத்தரபிரதேச மாநிலம் பரேலியில் செப்டம்பர் 26-ஆம் தேதி அப்பகுதி மதகுருவான மௌலானாவின் அழைப்பை ஏற்று ஐ லவ் முகமது போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலம் சென்றனர். முதலில் ஊர்வலத்துக்கு அனுமதியளித்த காவல்துறை கடைசி நேரத்தில் மறுப்புத் தெரிவித்திருக்கிறது. ஊர்வலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன் தடுப்புகளும் ஏற்படுத்தப்பட்டு போராட்டக்காரர்கள் தடுக்கப்பட்டனர். போராட்டத்தை வாபஸ் பெறுவதற்கு தொடக்கத்தில் ஒப்புக்கொண்ட மௌலானா பின்பு மறுக்கவே நிலைமை மோசமடைந்தது. கும்பலைக் கலைக்க போலீசார் தடியடி நடத்தினர்.

இதேபோல மகாராஷ்டிர மாநிலம் அகில்யா நகரிலும் செப்டம்பர் 29-ஆம் தேதி லத்தி சார்ஜ் நடத்தப்பட்டுள்ளது. அகில்யா நகரில் சாலையில் 'ஐ லவ் முகமது' என எழுதியது பிரச்சனையாகி மோதல் வெடித்துள்ளது. இவ்விவகாரத்தில் 30 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் இவ்விவகாரத்தை முன்வைத்து இந்தியாவெங்கும் 21 எஃப்.ஐ.ஆர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 1,324 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. 68 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்குப் போட்டியாக உத்தரப்பிரதேசத்தில் இந்துத்துவர்கள் சிவனின் உருவ பேனர்களுடன் ஊர்வலம் செல்வது, மசூதிகளின் அருகில் கூட்டமாகத் திரள்வது என போட்டி ஊர்வலங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இதையடுத்து உ.பி. அரசு இத்தகைய ஊர்வலங்களுக்கு கடும் கெடுபிடி விதிக்க ஆரம்பித்துள்ளது.

-க.சுப்பிரமணியன்



உங்கள் இல்ல
பூஜை அறையில் இருக்கவேண்டிய
வெற்றி தரும்
எந்திரம் - மந்திரம் - தந்திரம்
18 எந்திரங்கள்
108 மந்திரங்கள்
கந்தர்வ நாடி ஜோதிடர்
லால்குடி கோபாலகிருஷ்ணன் எழுதிய
தனிப்புத்தகம் இலவசம்!
“சன்யாசம் போனாலும் குடும்பத்தோடு தான்...”
பேரா. கு.ஞானசம்பந்தன்
பக்தி அனுபவங்கள்!
கடவுள் விடையல்ல... தேடல்
சொல்வேந்தர் சுகி சிவம்
இப்போது விற்பனையில்...
ஓம்
சரவணபவ
ஆன்மிக மாத இதழ்
அக்டோபர் 2025 ● ரூ.40


Advt



# உட்கட்சிப்பூசல்! தவிப்பில் தூத்துக்குடி த.வெ.க!

த.வெ.க. ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறது. இதுநாள்வரை இக்கட்சிக்கு, தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் கிளைக்கழகம் முதல் மா.செ. வரைக்குமான பொறுப்பாளர்கள் நியமிக்கப்படாமலிருப்பது ஆச்சர்யப்படுத்துகிறது. இதனால் கட்சித் தொண்டர்களிடையே தவிப்பும் குழப்பமும் நீடிக்கிறது.

த.வெ.க.வினர் சிலரிடம் பேசியபோது, ''த.வெ.க. தொடங்கியதிலிருந்தே தூத்துக்குடியை மட்டும் தலைவர் விஜய் தன்னுடைய நேர் கண்காணிப்பில் கொண்டு வந்துவிட்டார். தூத்துக்குடியைச் சேர்ந்த பில்லா ஜெகன், விஜய்யின் ஆரம்பகால ரசிகர். அவரோடு நல்ல அன்டர்ஸ்டாண்டிங்கில் இருப்பவர். அதுமட்டுமில்லாது ஜெகனும் அவரது குடும்பத்தாரும் விஜய்யின் குடும்பத்தாரிடம் நெருங்கிப் பழகக்கூடியவர்கள். அது இன்றளவும் தொடர்கிறது.

மேலும் பில்லா ஜெகன் ஆரம்ப காலத்திலிருந்தே தி.மு.க.விலிருப்பவர். அமைச்சர் அனிதாவுக்கு நெருக்கமானவர். கட்சி ஆரம்பித்த விஜய், தூத்துக்குடி மாவட்ட பொறுப்பாளராக பில்லா ஜெகனை நியமிக்க நினைத்தபோது, தான் தி.மு.க.வில் பயணிப்பதால் செட்டாகாது என்றவரிடம், அவரது தம்பி சுமனைக் கேட்டிருக்கிறார். அவரோ, அரசியலில் நாட்டமில்லையென்று கூலாகச் சொல்லியிருக்கிறார். இதையடுத்து பில்லா ஜெகனும், அவரது தம்பியும், தங்களது சகோதரியான அஜிதா ஆக்னலின் அரசியல் விருப்பம் பற்றி விஜய்யிடம் தெரிவித்து, அவருக்கு உறுதுணையாக நாங்கள் இருப்போம் என்று தெரிவித்ததால் அஜிதா ஆக்னலை கட்சியில் இணைத்த விஜய், அவரை தூத்துக்குடி மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கும் திட்டத்திலிருந்தார்.

இவ்விஷயத்தில் விஜய்யின் கணக்கே வேறு. ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தின்போது துப்பாக்கிச்சூட்டில் பலியான 13 அப்பாவிகளின் குடும்பத்தினரையும் சந்தித்த அஜிதா ஆக்னல், அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து நிதி உதவியும் செய்திருக்கிறார். பலியான 13 பேரில் 8 பேர் மீனவ சமுதாயம் சார்ந்தவர்கள். சம்பவத்திற்குப் பிறகு வந்த அனைத்து தேர்தல்களிலும் மீனவ சமுதாயத்தின் வாக்குகள் அ.தி.மு.க.வின் பக்கம் எட்டிப் பார்க்கவில்லையாம்.

தங்களது மதம் சார்ந்த விஜய் தற்போது அரசியல் கட்சி ஆரம்பித்ததோடு, தங்களுக்கு ஆரம்பத்தில் அவர் உதவியதையும் மீனவ சமூகத்தினர் நெகிழ்ச்சியாகப் பார்க்கிறார்களாம். இதனால் மீனவ சமுதாயத்தின் 48 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் த.வெ.க. பக்கம் திரும்புமென்று கணக்கிட்ட விஜய், மீனவ சமூகம் சார்ந்த அஜிதா ஆக்னலை மாவட்ட பொறுப்பாளராக்கும்



அஜிதா ஆக்னல்

**எப்போதும் தவறான நபர்களே, வாழ்க்கையில் சரியான பாடங்களை கற்பிக்கிறார்கள்!**

முடிவிலிருக்கிறார். மேலும், பெண் மா.செ. என்பதால் தொகுதியில் பெண் வாக்காளர்களை வசப்படுத்தலாம். தி.மு.க. மா.செ.வான கீதா ஜீவனுக்கு டஃப் கொடுக்கலாம் என்ற திட்டத்தில் இருக்கிறாராம்.

தலைவர் விஜய்யின் அசைக்கமுடியாத ஆதரவிருப்பதால் மா.செ. பொறுப்பு நிச்சயம் என்ற எண்ணத்தில் அன்றாடம் கட்சிப் பணிகளை மேற்கொள்ளும் அஜிதா ஆக்னல், கட்சி தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்துவது, மக்களுக்கு நிவாரண உதவிகளை அளிப்பது எனப் பல பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார். இந்த வகையில் பல லட்சங்கள் செலவிட்டிருக்கிறாராம். இது இப்படியிருக்க, தூத்துக்குடி வந்த த.வெ.க.வின் பொ.செ.வான புஸ்ஸி ஆனந்த், அரசியல் சூழலைப் பற்றி விசாரிக்க, தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் நாடார் சமூகம் சார்ந்தவர்களே பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுவது வழக்கமென்று தெரிந்துகொண்ட புஸ்ஸி ஆனந்த், அந்த சமூகம் சார்ந்த எஸ்.டி.ஆர்.சாமுவேல்ராஜ் என்பவரை மாவட்டப் பொறுப்பாளராக்கும் முயற்சியிலிருந்திருக்கிறார். அரசியலுக்குப் புதிதான சாமுவேல்ராஜ், த.மா.க.வைச் சேர்ந்த எஸ்.டி.ஆர்.விஜயசீலனின் தம்பி. இதனிடையே தி.மு.க.வின் முன்னாள் எம்.எல்.ஏ.வான டேவிட் செல்வின், பிற கட்சிகளுக்குச் சென்றுவிட்டு தற்போது த.வெ.க. பக்கம் திரும்பியிருக்கிறார். த.வெ.க.வின் மூலம் ஸ்ரீவைகுண்டம் அல்லது தூத்துக்குடி தொகுதியின் எம்.எல்.ஏ.வாகிடலாமென்றும், கட்சியின் மாவட்ட பொறுப்பையும் பெற்றுவிடலாமென்ற கணக்கோடும் கட்சியில் இணைந்து தனிக் கோஷ்டியாக செயல்பட்டு வருகிறாராம்.


டேவிட் செல்வின்


சாமுவேல்ராஜ்

தூத்துக்குடி, நெல்லை, குமரி மாவட்டங்களில் நிதி நிறுவனம் மற்றும் கட்டுமானத்தொழிலை நடத்திவரும் பசையுள்ள தொழிலதிபரான கே.ஜே.ஆர்.முருகன் என்பவரும் மா.செ. வாகிவிட வேண்டுமென்ற திட்டத்தில் கட்சியின் மேல்மட்டப் புள்ளிகளின் தொடர்பிலிருக்கிறாராம். கட்சியின் மா.செ. பொறுப்பை அடைவதற்கான ரேஸ்கள் வேகமெடுத்துக் கொண்டிருக்க, விஜய்யோ அஜிதா ஆக்னலைத்தான் மா.செ. பொறுப்பிலமர்த்த வேண்டுமென்ற முடிவில் புஸ்ஸி ஆனந்தின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதால் பொறுப்பாளர்களை நியமிப்பதில் இழுபறி நீடித்துக்கொண்டிருக்கிறது" என்கிறார்கள்.

இந்தச் சூழலில், அக்டோபர் 20-ல், விஜய் தூத்துக்குடி மாவட்டத்தில் பிரச்சாரத்திற்கு வர அனுமதிகேட்டு அஜிதா ஆக்னல் தரப்பும், டேவிட் செல்வின் தரப்பும் தனித்தனியே மாவட்ட எஸ்.பி.யான ஆல்பர்ட் ஜானிடம் மனு கொடுத்தது பரபரப்பை கிளப்பியது. கைக்கெட்டும் தூரத்தில் தேர்தல் இருக்கிறது. வாக்காளர் சரிபார்ப்பு, பூத் கமிட்டி அமைப்பு என்று தலைக்கு மேலே வேலைகள் இருக்கின்றன. இந்த நிலையில் பொறுப்பாளரே இல்லாமல் கட்சித் தொண்டர்கள் எந்தப் பாதையில் செல்வது, எந்த வேலைகளைக் கவனிப்பது என்று குழப்பத்துடனும், தடுமாற்றத்துடனும் இருப்பதைக் கட்சியின் மேல்மட்டம் வரை தெரிவித்தும் கவனித்ததாகத் தெரியவில்லை.

'பரம்பரை பரம்பரையான அரசியல் கட்சிகளோடு மோதுவது சாதாரண விஷயமல்ல. அக்கட்சிகளை எதிர்கொள்ளுமளவிற்கு டஃப் கொடுப்பதில்தான் இருக்கிறது புதிதாக களத்திற்கு வந்த த.வெ.க.வின் வலிமை' என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

**-பி.சிவன்**

படங்கள்: ப.இராம்குமார்

# லாக்கப் டெத்!



முத்து கார்த்திக்



2019 ஆம் ஆண்டு மதுரை எஸ்.எஸ்.காலனி காவல் நிலைய விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட சிறுவன் முத்து கார்த்திக்கை போலீஸார் கடுமையாகத் தாக்கியதால் படுகாயமடைந்து உயிரிழந்த வழக்கில், காவல் ஆய்வாளர் அலெக்ஸ் ராஜ் மற்றும் காவலர்கள் சதீஷ், ரவி, ரவிச்சந்திரன் உட்பட 4 காவலர்களுக்கு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கில், விசாரணை அதிகாரியாக இருந்த தற்போதைய காவல்துறை ஐ.ஜி. ராஜேஸ்வரி, புலன் விசாரணையை அரை குறையாகச் செய்துள்ளதாகவும், குற்றம்சாட்டப்பட்ட 4 காவலர்களுக்கு உதவும் நோக்கத்தில் புலன் விசாரணையை முறையாகச் செய்யாமல், காவல்துறை ஐ.ஜி. ராஜேஸ்வரி தவறு செய்துள்ளதாகவும், அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அறிக்கை தாக்கல் செய்யுமாறு காவல்துறை இயக்குநருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும், உடற்கூராய்வின்போது காயங்களை மறைத்து அறிக்கை அளித்த அரசு மருத்துவர் ஜெயக்குமார் மற்றும் மருத்துவ அலுவலர் ஆர்.எம்.ஓ. ஸ்ரீலதா மீதும் துறைரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நீதிபதி ஜோசப்ஜாய் தீர்ப்பளித்தது தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தீர்ப்பு வெளியானதும், நீதிமன்றத்திற்கு வெளியே இருந்த கொலைசெய்யப்பட்ட சிறுவன் முத்து கார்த்திக்கின் அம்மா ஜெயா நம்மிடம் பேசினார். "நான் பூ விற்கிறேன். எனது கணவர் லோடுமேனாக கூலி வேலை பார்த்து, அதில் வரும் வருமானத்தில் தான் என் ஒரே மகனை வளர்த்தேன். எங்க கஷ்டத்தை பார்த்து அவனே பத்தாவது



ஐ.ஜி. ராஜேஸ்வரி

## கக்கன் பேத்தி ஐ.ஜி.ராஜேஸ்வரிக்கு நீதிமன்றம் கண்டிப்பு!

முடித்ததும், நானும் வேலைக்கு போறேன் என்று சொல்லிவிட்டு எங்களுக்காக வேலைக்கு போனான். வேலை பார்த்த இடத்தில் எனது மகனை நகைத்திருட்டு தொடர்பாக எஸ்.எஸ். காலனி காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் சென்று, சிறுவனென்றும்கூட பார்க்காமல் அவனை கடுமையாகத் தாக்கினார்கள். இதனால் படுகாயமடைந்து மூச்சுப்பேச்சே இல்லாத அளவுக்கு மோசமான நிலையிலிருந்த மகனை மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு எனக்கு தகவல் கொடுத்தார்கள். பதறியடித்துக் கொண்டு அங்கு போனபோது அவன் பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தான். உடம்பு முழுவதும் இரத்தக்காயங்கள் இருந்தன. முகம் வீங்கியிருந்தது.

'ஏன் சார், நகையை அவன் எடுக்கவில்லை என்கிறானே, என் வீட்டுக்கும் வந்து துலாவித் துலாவித் தேடினீர்களே, அப்புறம் ஏன் சார் இப்படி கண்ணுமுண்ணு தெரியாம அடித்து, குற்றுயிரும் கொலையுயிருமாகப் போட்டிருக்கீங்க?' என்று கதறினேன். பிறகு அங்கிருந்த சிலரிடம் விசாரித்தபோது, என் மகனை திருடியதாக ஒத்துக்கொள்ளச் சொல்லி பூட்ஸ் காலால் மிதி மிதியென்று மிதித்திருக்கிறார்கள். அதனால் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்திருக்கிறான். இதையடுத்து, எனது மகன் இறப்புக்கு காரணமான எஸ்.எஸ். காலனி காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மருத்துவமனை வளாகத்திலேயே அழுது கூப்பாடு போட்டேன். என்னை மிரட்டி பாடியை வாங்கவைத்து அவசர அவரமாக போஸ்ட்மார்ட்டம் செய்ததாகக் கூறி ஏமாற்றி புதைத்துவிட்டார்கள்.

அவன் உடம்பில் இரத்தக்காயங்கள் இருந்தது. அதை மறைத்து போஸ்ட்மார்ட்டம் செய்யாமலேயே எந்த காயமும் இல்லை என்று பொய்யாக சான்றிதழ் அளித்தது எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்த, 'என் மகனை கொன்ற போலீஸ்காரர்கள், அதற்கு உடந்தையாக இருந்த மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் உடலை தோண்டியெடுத்து நீதிபதி முன் போஸ்ட்மார்ட்டம் செய்ய வேண்டும். மேலும் வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றவேண்டும்' என்று உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். வழக்கை விசாரித்த நீதிபதிகள், வழக்கை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டனர். அதனைத் தொடர்ந்து சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர், காவல் ஆய்வாளர் அலெக்ஸ் ராஜ் மற்றும் காவலர்கள் சதீஷ், ரவி, ரவிச்சந்திரன் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட 5ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது.

விசாரணை முடிவடைந்த நிலையில், காவல் ஆய்வாளர் அலெக்ஸ் ராஜ் மற்றும் காவலர்கள் சதீஷ், ரவி, ரவிச்சந்திரன் ஆகிய


தண்டனை பெற்ற போலீசார்

நால்வருக்கும் 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி ஜோசப்ஜாய் உத்தரவிட்டார். தீர்ப்பு என் மனதிற்கு ஆறுதலைத் தந்தாலும், 'ஜெய்பீம்' படத்தில் வருவதுபோல், வழக்கு நடந்தபோது சாட்சிகளை அழிக்கவும், என்னை பல்வேறு வழிகளில் வழக்கை வாபஸ் வாங்க வைக்கச் செய்யவும் மிரட்டினார்கள். எனது வழக்கறிஞர்கள் ராஜா முகமது மற்றும் பஷீர் சாருக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். அவர்களால் தான் என்னை மிரட்டிய ஆய்வாளர் பிரேம சந்திரன், சார்பு ஆய்வாளர் கண்ணன், மற்றொரு ஆய்வாளர் அருணாச்சலம் ஆகியோரை பணி நீக்க உத்தரவு போட்டுள்ளார்கள். மேலும், உண்மையை மறைத்து குற்றவாளிகளுக்கு உடந்தையாக செயல்பட்ட, இப்போது ஐ.ஜி.யாக இருக்கும்

**யாருக்காகவும் வாழ்ந்துகாட்ட இந்த வாழ்க்கை ஒன்றும் பரீட்சையில்லை... நமக்காக வாழ்ந்துவிட்டுப் போவதற்கான ஒரு வாய்ப்பு மட்டுமே!**


ஹென்றி டிஃபேன்


வழக்கறிஞர் பஷீர்

இராஜேஸ்வரியிடம் தான் என்னுடைய மகனின் சாவை தாங்கமுடியாமல் பலமுறை முறையிட்டேன். பழம்பெரும் சுதந்திரப்போராட்ட தியாகியும் காந்தியவாதியுமான கக்கனின் பேத்தியான இராஜேஸ்வரி, நேர்மையாக செயல்படுவார், எனக்கு ஆதரவாக இருப்பாரென்று மிகவும் நம்பினேன். ஆனால் அவரோ, என் மகனை கொன்ற போலீஸாருக்கு சாதகமாகவும், மருத்துவர்களின் போலியான போஸ்ட் மார்ட்டத்திற்கு உடந்தையாகவும் இருந்தார். இவ்வளவு பிரச்சனைகளையும் கண்டும்காணாததுபோல் போலீசாரின் மோசடிகளுக்கு ஆதரவாக இருந்தார். அப்போதே சொன்னேன், 'பெத்த மகனை இழந்து நிர்க்கதியாக நிற்கிறேன், வயிறு எரிஞ்சு சொல்றேன், புத்திரசோகத்தின் சாபம் பலிக்கும், எல்லோரும் ஒருநாள் ஜெயிலுக்கு போவீங்க, தாயின் கண்ணீருக்கு ஒரு நாள் பதில் சொல்லியே ஆகவேண்டும்' என்று சாபம் விட்டுத்தான் வந்தேன். அது இன்று பலித்தேவிட்டது. இதுதான் கொஞ்சம் ஆறுதலை அளிக்கிறது" என்றார்.

இந்த தீர்ப்பு கூறித்து மக்கள் கண்காணிப்பகம் ஹென்றி டிஃபென் நம்மிடம், "இந்த சம்பவம் நடைபெற்றபோது மதுரை மாவட்ட போலீஸ் கமிஷனராக இருந்தவர் டேவிட்சன் தேவஆசிர்வாதம். இவ்வளவு கொடுமைகள், அக்கிரமங்கள் செய்த அந்த நான்கு காவலர்களையும் கைது செய்யவே இல்லை. 2025 வரை வெளியேதான் இருந்தார்கள். இவ்வளவு அக்கிரமம் நடந்த காவல் நிலையத்தை, தமிழகத்தின் சிறந்த காவல் நிலையமாகத் தேர்வுசெய்யக் காரணமாக இருந்தவர்களில் கக்கனின் நல்மதிப்பைக் கெடுக்கும்விதமாக செயல்பட்ட கக்கன் பேத்தி ராஜேஸ்வரியும் ஒருவர். அவர்மீது துறைரீதியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க உத்தரவு போட்டது வரவேற்கத்தக்கது. இதைவிடக் கேவலம், போஸ்ட் மார்ட்டம் செய்யாமலேயே ஆர்.எம்.ஓ. லதா, போஸ்ட்மார்ட்டம் செய்ததாக ரிப்போர்ட் கொடுத்தது. மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு 20 லட்சத்தை கொடுக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் கொடுக்காமல் இழுத்தடித்தது கண்டிக்கத்தக்கது. மாவட்ட கீழமை நீதிமன்றம் இப்படி ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார்.


ஜெயா

இந்த தீர்ப்பு குறித்து, இந்த வழக்கை பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மிரட்டல்களுக்கும் மத்தியில், நடத்திய வழக்கறிஞர் பஷீர் நம்மிடம், "அதிகார வர்க்கம் சாதாரண மக்களை தங்கள் இஷ்டப்படி விசாரணை என்ற பெயரில் அடித்தே கொல்லும் என்பது எவ்வளவு பெரிய அநியாயம். போன உயிர் போனதுதான். தாயின் போராட்டத்தால் தான் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு கிடைத்திருக்கிறது. அதேபோன்று குற்றவாளிகள்தரப்பு மேல் முறையீட்டுக்கு செல்லும்போது அரசு தரப்பு பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நிற்கவேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறோம். அதேபோன்று பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்ட 25 லட்சத்தில் 5 லட்சம் மட்டுமே கொடுக்கப் பட்டுள்ளது. மிச்ச 20 லட்சத்தையும் உடனே கொடுக்க வேண்டும். மேலும், அந்த குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்" என்றார். கக்கனின் பேத்தி, அநீதிக்கு துணை நின்றது வரலாற்றுத் துயரம்!

**-அண்ணல்**



Dia BOOSTER
a Food Supplement
IMPROVES ENERGY, STRENGTH, STAMINA
டயா பூஸ்டர் ™
சர்க்கரை நோயாளிகளின் அக்கரையான உணவு
கேப்சூல் வடிவில்
MONEY BACK 100% GUARANTEED
டயா பூஸ்டர் ஒரு சர்க்கரை நோய்கான உத்தரவாதம்
சர்க்கரை நோய்க்கு
Bye Bye சொல்லுங்கள்,
டயா பூஸ்டருடன்.
72 மணி நேரத்தில் இரத்தத்தில் உள்ள
சர்க்கரையின் அளவை கட்டுக்குள்
கொண்டு வருகிறது..
மேலும் தொடர்புக்கு
78 23 99 7001 | 78 23 99 7004
ஜிங்கா கோல்டு
Jinga Gold
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/-
மட்டுமே
GMP
ISO
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY VISHWAM
MedPlus
ஒன்னு போதும்
நின்னு பேசும்!
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
Super stockist Sruti's
ஜிங்கா கோல்டு
ஹெல்ப் லைன்
9962 66 4444
மாவட்ட வாரியான உதவிக்கு
9003640742
For Personal Delivery
9962 8080 90


Advt

தமிழக அரசியலில் மிகவும் பலம்வாய்ந்த அரசியல்வாதிகள் என்று ஒரு சிலரை நாம் விரல்விட்டு எண்ணிவிட முடியும். அப்படி, அரசியலால் தவிர்க்கமுடியாத அரசியல்வாதிகளின் பட்டியலில் இடம்பிடித்திருப்பவர் அமைச்சர் கே.என்.நேரு. என்றைக்கும் தனக்கான தனித்துவத்தோடு செயல்படும் இவர், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் திருச்சி அரசியலில் பெரும் ஆளுமையாக வலம் வருபவர். தி.மு.க.வில் கிளையில் தொடங்கி யூனியன் சேர்மன், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட செயலாளர், முதன்மை செயலாளர், 16 வருடங்களுக்கு மேல் அமைச்சர் என தமிழக அரசியலை திரும்பிப் பார்க்கவைப்பவர்.

1986-ல் தி.மு.க. சார்பில் புள்ளம்பாடி யூனியன் தலைவராக கே.என்.நேரு பொறுப்பேற்றார். 1989-ல் லால்குடி சட்டமன்ற உறுப்பினராக தேர்வாகி, மின்சாரம், பால்வளம், தொழிலாளர் நலத்துறை மற்றும் செய்தித்துறை அமைச்சராக பதவியிலிருந்தார். 1996-ல் மீண்டும் வெற்றிபெற்று உணவு, கூட்டுறவு மற்றும் புள்ளியியல் துறை அமைச்சராக பொறுப்பேற்றார். 2006-ல் திருச்சி மேற்கு தொகுதியில் வென்று, போக்குவரத்துத்துறை அமைச்சராக பதவி வகித்தார். 2016ல் எம்.எல்.ஏ.வாக தேர்வானவர். தற்போது தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சராகப் பதவியில் உள்ளார். திருச்சி மேற்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான இவர், தி.மு.க.வின் தலைமைக் கழக முதன்மை செயலாளராகவும் பொறுப்பிலிருக்கிறார்.

கட்சிக்கும் தலைமைக்கும் எப்போதும் நம்பிக்கைக் குரியவராக செயல்பட்டுவரும் அமைச்சர் கே.என்.நேரு, கலைஞரின் மிகுந்த நம்பிக்கைக்குரியவராக இருந்தவர். இவருடைய முயற்சியால் தான் முதன்முதலாக சென்னையிலுள்ள அண்ணா அறிவாலயம் போல் திருச்சியில் கலைஞர் அறிவாலயம் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்டது. அன்று ஆரம்பித்த வளர்ச்சி, இன்றுவரை தொடர்கிறது. ஒருபக்கம் வளர்ச்சி என்றால், மற்றொரு பக்கம் பிரமாண்டத்திற்கு பெயர் போனவர். 2006-ல், திருச்சி தீரன்நகர் பகுதியில் கலைஞர் தலைமையில் மாபெரும் மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டை திறம்பட பிரமாண்டமாக நடத்திக்காட்டிய பின்னர், பல மாநாடுகளை நன்முறையில் நடத்தி அசத்தியவர் கே.என்.நேரு. அவர், வரும் 2026, ஜனவரியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாபெரும் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டுள்ளார். அந்த மாநாட்டை எங்கு நடத்துவது என்பது குறித்த ஆலோசனை நடைபெற்றுவருகிறது. தனது அமைச்சர் பொறுப்பின் மூலம், திருச்சி மாவட்டத்திற்கென இந்த 5 ஆண்டுகளில் மட்டும் 9 புதிய கூட்டுக்குடிநீர் திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இதற்காக மொத்தம்








ரூ.976.93 கோடி நிதி ஒதுக்கி, அந்த பணிகளனைத்தும் முடிவடைந்து 118.47எம்.எல்.டி. அளவு தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், கரூர் மாவட்டத்தில் 604 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருச்சி மாவட்டத்திலுள்ள 839 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஆய்விலுள்ளது. இதற்காக 1220.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் இதுவரை எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு மாபெரும் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் திருச்சியில் பஞ்சப்பூர் பகுதியில் கட்டப்பட்டுள்ளது. அரசு பேருந்து முனையம், தனியார் பேருந்து முனையம், ஒருங்கிணைந்த மார்க்கெட் என்று மொத்தம் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, தற்போது அரசு பேருந்து முனையமும், தனியார் பேருந்து முனையமும் பணிகள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மார்க்கெட் பணிகள் நடைபெற்றுவருகிறது. மேலும் கலைஞர் ஆட்சிக் காலத்தில் திறக்கப்பட்ட காவிரி பாலம் பல ஆண்டுகளைக் கடந்து நின்றாலும், அதில் அவ்வப்போது ஏற்படும் பழுது காரணமாக, புதிய காவிரி பாலம் அமைப்பதற்காக ரூ.106 கோடி நிதி ஒதுக்கி பணிகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுவருகிறது. அதேபோல், ரூ.20 கோடியில் பறவைகள் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.100 கோடியில் காமராஜர் பெயரில் மன்னார்புரத்தில் மாபெரும் நூலகக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. ரூ.3 கோடி ரூபாய் மதிப்பில் திருச்சி உறையூரில் முதல்வர் படைப்பகம் அமைக்கப்பட்டு வருகிறது. திருச்சி ஸ்ரீரங்கத்தில் ரூ.11.10 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகிறது, விரைவில் திறக்கப்படவுள்ளது. அதுபோல் திருச்சி மாவட்டம், மணப்பாறையில் வெளிநாட்டை சேர்ந்த காலணி தயாரிக்கும் பெரிய நிறுவனம் அமையவுள்ளது.


இப்படியாகத் தான் பதவியிலிருக்கும் காலங்களில் திருச்சி மட்டுமின்றி அனைத்து மாவட்டங்களிலும் பல்லாயிரம் கோடி மதிப்பிலான வளர்ச்சிப்பணிகளை கே.என்.நேரு செய்துவருகிறார். குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் மட்டும் இதுவரை ஐயாயிரம் கோடிக்கும் அதிகமான வளர்ச்சித்திட்டங்கள் கொண்டுவரப்பட்டு, பல பணிகள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவருடைய பதவிக்காலத்தில் திருச்சி ஓர் வளர்ந்த நகரமாக உருவெடுத்துள்ளது. இதே வளர்ச்சி தொடர்கையில், தமிழகத்தின் இரண்டாவது தலைநகராக திருச்சி உருவெடுக்கும்.

2026-ல் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க அச்சாரமாக, வருகின்ற ஜனவரி 2ஆம் தேதி திருச்சி மாவட்டத்தில் இதுவரை நடத்தப்படாத அளவிற்கு ஒரு மாபெரும் மாநாட்டை நடத்த அமைச்சர் கே.என்.நேரு, நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்துவருகிறார். மீண்டும் திருச்சி மாவட்டம் ஒரு மாபெரும் மாநாட்டை சந்திக்கப் போகிறது!

**-துரை.மகேஷ்**

# லிப்லாக் ஓ.கே!

விஜய் தேவரகொண்டாவும் கீர்த்திசுரேஷும் 'ரவுடி ஜனார்தன்' என்ற தெலுங்கு படத்தில் நடிக்க கமிட்டானார்கள். முன்னதாகவே இது கமிட்டான நிலையில் கடந்த மே மாதம் படப்பிடிப்பு திட்டமிடப்பட்டு பின்பு ஜூனுக்கு தள்ளி இப்போதுவரை இழுபறியாக இருந்து, ஒருவழியாக விரைவில் தொடங்கப்படவுள்ளது. இந்த சூழலில் கீர்த்தி சுரேஷ் இப்படத்தில் கமிட்டானதற்கு ஒரு சுவாரஸ்ய பின்னணி இருப்பது தற்போது வெளியாகியுள்ளது. அதாவது கீர்த்தி சுரேஷிற்கு முன்பாக இந்த ரோலில் நடிக்க வேண்டியது ருக்மிணி வசந்த். ஆனால் படத்தில் ஒரு லிப் லாக் சீன் இருப்பதால் ரெட் சிக்னல் கொடுத்துவிட்டார். ஆனால் கீர்த்தி சுரேஷ், லிப் லாக் சீன் பிரச்சனை இல்லை என க்ரீன் சிக்னல் கொடுத்திருக்கிறார். அவரிடம் இதுவரை லிப் லாக் சீனில் நீங்கள் நடித்ததில்லையே எனக் கேட்டால், கதைக்கு தேவையென்றால் நடிப்பேன் என பதிலடி தருகிறாராம்.



கீர்த்தி சுரேஷ்

நெருப்புதான் தங்கத்தை உருக்கி அழகாக்குகிறது; அதேபோல் துயரம்தான் மனிதனை செதுக்கி உயர்வாக்குகிறது!

## பவானி நம்பிக்கை!

'விடுதலை' படம் மூலம் பலரது கவனத்தை ஈர்த்த பவானிஸ்ரீ, அடுத்து 'நண்பன் ஒருவன் வந்த பிறகு' படத்தில் நடித்திருந்தார். ஆனால் அது கவனம் பெறாமல் போய்விட்டது. பின்பு வெளியான 'விடுதலை 2' படத்திலும் அவருக்கு பெரிதாக காட்சிகள் இல்லை. கவனம் ஈர்த்தும் அடுத்தடுத்து படங்கள் கமிட்டாகாமல் இருந்த அவர், நிதானமாக ஒவ்வொரு கதையையும் தேர்ந்தெடுத்து வருகிறார். அந்த வகையில் தற்போது சசிகுமார் நடிக்கும் புது படத்தில் நடிக்கிறார். 'யாத்திசை' பட இயக்குநர் தரணி ராசேந்திரன் இயக்க, இவரோடு சமுத்திரக்கனி மற்றும் கிஷோர் ஆகியோரும் நடிக்கின்றனர். அதோடு இப்படம் தனக்கு அடுத்தடுத்து பட வாய்ப்புகளைப் பெற்று முன்னணி நடிகை என்ற அந்தஸ்தை நோக்கி பாதை அமைத்துக் கொடுக்கும் என நம்பிக்கை தெரிவிக்கிறார்.

## புதிய அவதாரம்!

நடிகையாக வளர்ந்துவரும் வரலட்சுமி சரத்குமார், தற்போது அதிரடியாக தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் அவதாரத்தை எடுத்துள்ளார். தோசா டைரீஸ் என்ற புதிய தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் அவரது சகோதரி பூஜா சரத்குமாரோடு இணைந்து தயாரித்தவர், முதல் படமாக 'சரஸ்வதி' என்ற தலைப்பில் ஒரு படத்தை தயாரிக்கிறார். இப்படத்தை தயாரிப்பது மட்டுமல்லாமல் இயக்கி அதில் லீட் ரோலில் நடிக்கிறார். இப்படத்தில் வரலட்சுமி சரத்குமாருடன் பிரகாஷ் ராஜ், பிரியாமணி, நவின் சந்திரா ஆகியோர் நடிக்கின்றனர். தமன் இசையமைக்கிறார். பான் இந்தியா படமாக தமிழ் உட்பட ஐந்து மொழிகளில் வெளியாகிறது. இதுவரை நடிகையாக நாயகி, வில்லி, குணச்சித்திரம் மற்றும் கேமியோ ரோல்களில் நடித்துள்ளதால் இயக்கத்திலும் தயாரிப்பிலும் ஒரு ரவுண்டு வலம் வருவோம் என்ற முடிவோடு இருக்கிறார்.

## வெற்றி உறுதி!

கோலிவுட் மற்றும் டோலிவுட்டில் தற்போது கவனம் செலுத்திவரும் மீனாட்சி சௌத்ரி, முதன் முதலில் திரைத்துறையில் அறிமுகமானது பாலிவுட் படம் மூலம்தான். 'அப்ஸ்டார்ட்ஸ்' என்ற தலைப்பில் 2019ஆம் ஆண்டு வெளியான படத்தில் குணச்சித்திர கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இப்படம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. அதனால் இந்தப் படத்திற்கு பிறகு பாலிவுட் பக்கம் அவர் போகவில்லை. முழுக்க முழுக்க தென்னிந்தியா பக்கமே வந்துவிட்டார். இப்போது இங்கு அவருக்கென ஒரு இமேஜ் உருவான நிலையில் தற்போது மீண்டும் பாலிவுட் பக்கம் போயிருக்கிறார். அங்கு மிகவும் பிரபலமான 'ஃபோர்ஸ்' படத்தின் மூன்றாம் பாகத்தில் ஜான் ஆபிரஹாமுக்கு ஜோடியாக நடிக்க கமிட்டாகியுள்ளார். நவம்பரில் படப்பிடிப்பு தொடங்குகிறது. இதில் பவர்ஃபுல்லான ஆக்‌ஷன் ரோலில் அவர் நடிக்கிறார். அதனால் தற்போது அதற்காக தீவிர பயிற்சி பெற்று வருகிறார். நாயகியாக நடிப்பதால் இப்படம் தான் அவரது பாலிவுட் அறிமுகப் படமாக பார்க்கப்படுகிறது. முதல் படத்தில் நடந்தது இந்த படத்தில் நடக்காது, அதாவது நிச்சயம் வெற்றியைப் பெறுவேன் என்ற ஒரு குறிக்கோளோடு பணியாற்றிவருகிறார்.

-கவிதாசன் ஜெ.



மீனாட்சி சௌத்ரி

# வேலூர் தொகுதி யாருக்கு?


ஏ.சி.சண்முகம்

வேலூர் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் அசைக்க முடியாத கோட்டை. சிறுபான்மையின வாக்குகள், முதலியார் சமூக வாக்குகள் நிறைந்த தொகுதியிது. வெற்றியைத் தீர்மானிப்பது சிறுபான்மையின வாக்குகள்தான்.

1952 முதல் 2021 வரை இந்த தொகுதியில் 8 முறை தி.மு.க. வெற்றிபெற்றுள்ளது. தனித்து இரண்டு முறை, தி.மு.க. கூட்டணியில் இரண்டு முறை, அ.தி.மு.க. கூட்டணியில் இரண்டு முறை என 6 முறை காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது. அதிலும் தொடர்ந்து நான்கு முறை வெற்றிபெற்றவர் ஞானசேகரன். அ.தி.மு.க. இரண்டு முறை மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

தற்போது இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் தி.மு.க.வைச் சேர்ந்த வேலூர் மாநகர செயலாளர் கார்த்திகேயன். ஏ.சி.சண்முகத்தின் புதிய நீதிக்கட்சியில் பொறுப்பிலிருந்த கார்த்தியை வேலூர் தி.மு.க.வில் சரியான ஆள் இல்லை என தி.மு.க.வுக்கு அழைத்துவந்தவர் தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன். அவர் மூலமாக கவுன்சிலர் சீட் வாங்கி வேலூர் நகராட்சி சேர்மனானவர், வேலூர் தொகுதி எம்.எல்.ஏ.வாகவும் மாறினார். பின்னர் அணிமாறி திருவண்ணாமலை மா.செ. அமைச்சர் எ.வ.வேலு ஆதரவாளரானார். இரண்டாவது முறையும் சீட் வாங்கி வெற்றி பெற்றுள்ளார்.

தேர்தல் வாக்குறுதியாக, தொகுதி மக்களுக்கு இலவச வீட்டு மனை வாங்கித் தருவேன் எனச் சொன்னதை கண்டுகொள்ளவில்லை. போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மாநகரில் மேம்பாலங்கள் அமைக்கப்படும், மாநகர் சுற்றுப்பாதை அமைக்கப்படும், தினசரி குடிநீர் வழங்கப்படும், காட்பாடி டூ சத்துவாச்சாரிக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படும் போன்ற கோரிக்கைகளை 2016 தேர்தலின்போதும் மக்கள் மன்றத்தில் வைத்தார். எதிர்க்கட்சியாக இருந்ததால் எதுவும் செய்யமுடியவில்லை என 2021 தேர்தல் பிரச்சாரத்தில் சொல்லி தப்பினார். தற்போது ஆளும்கட்சி எம்.எல்.ஏ. இப்போதும் சொன்னது சொன்னதாகவே இருக்கின்றது. அவருக்கு பெயர்சொல்லும்படியான திட்டம் என்றால் பென்டிலென்ட் மருத்துவமனையை பன்னோக்கு மருத்துவமனையாக பிரமாண்டமாகக் கட்டியதுதான்.


ஞானி சதீஷ்குமார்

தான் ஒரு ஒரு எம்.எல்.ஏ. என்பதை மறந்து மேயர் வேலையைப் பார்க்கிறார். கவுன்சில் கூட்டம் நடந்தால் முதல் ஆளாகப்போய் அமர்ந்துகொள்வது, மேயரை யாராவது கேள்விகேட்டால் அந்த கவுன்சிலரை ஓரம்கட்டுவது,


அப்பு



www.nakkheeran.in

**உன்னை நம்பு, உன் உழைப்பை நம்பு, உன் முயற்சியை நம்பு, உனக்காக உதவி செய்பவர்கள் என்று... யாரையும் நம்பிவிடாதே!**


கார்த்திகேயன்

மாநகராட்சியில் நடைபெறும் சின்னச் சின்ன வேலைகள் முதல் பெரிய வேலைகள்வரை அத்தனையிலும் தலையிட்டு கவுன்சிலர்களுக்கான கமிஷனையும் தானே வாங்கிக்கொள்கிறார். எம்.எல்.ஏ.வின் செயல்பாடுகளால் ஆளும்கட்சி கவுன்சிலர்கள் எம்எல்ஏ. மீது ஏக அதிருப்தியில் உள்ளனர். தொகுதியில் எம்.எல்.ஏ.வுக்கு எதிரி எதிர்க்கட்சியில்லை, சொந்தக் கட்சி கவுன்சிலர்களும், கட்சியினரும்தான்.


ஞானசேகரன்

மூன்றாவது முறையாக சீட் வாங்கிவிட கார்த்தி எம்.எல்.ஏ. முயற்சி செய்துவருகிறார். எனக்கு சீட் தாங்கன்னு கடைசி நாள் வரை இவர் போய் கேட்கமாட்டாரு, முக்கிய நிர்வாகிகள் இவரிடம் வந்து நீங்களே நில்லுங்க அப்படிங்கறமாதிரி கெஞ்சவைப்பாரு. ஏன்னா சாதிரீதியா வலிமையான ஆள் இத்தொகுதியில் இல்லாதது அவருக்கு ப்ளஸ். அதனால் அவரைத் தவிர வேற யாருக்கும் சீட் இல்லை என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்.

அ.தி.மு.க.விலிருந்து தி.மு.க.வுக்கு வந்த முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜய் சீட் வாங்க முயற்சிசெய்கிறார். இவர் மீண்டும் அ.தி.மு.க. போக முயற்சிக்கிறார் என்கிறது ஒருதரப்பு. காங்கிரஸிலிருந்து அ.தி.மு.க. பயணம்போய்விட்டு தி.மு.க.வுக்கு வந்துள்ள, இந்த தொகுதியில் நான்குமுறை வெற்றிபெற்று எம்.எல்.ஏ.வாக இருந்த ஞானசேகரனும் முயற்சிசெய்கிறார். அதேநேரத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. தேவராஜின் பேரனும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளராகவுள்ள பாலாஜியும் கேட்கும் திட்டத்தில் உள்ளார் என்கிறார்கள். இவர்களோடு முன்னாள் எம்.பி. முகமதுசகியின் மகன் டாக்டர் சகி, பகுதிச் செயலாளர் சத்திய மூர்த்தி உட்பட சிலர் தலைமை செலவு செய்வதாக இருந்தால் நாங்கள் நிற்கத் தயார் என்கின்றனர்.


டாக்டர் விஜய்

அ.தி.மு.க.வில் வேலூர் மாநகர மாவட்டச் செயலாளராக உள்ள எஸ்.ஆர்.கே. அப்பு, தகவல் தொழில்நுட்ப அணி மண்டலச் செயலாளர் ஜனனி.சதீஷ்குமார், முன்னாள் மா.செ. மூர்த்தி உட்பட சிலர் முயற்சிக்கின்றனர்.

வேலூர் தொகுதியில் புதிய நீதிக்கட்சி ஏ.சி.சண்முகம் நிற்கலாம் என ஒரு பேச்சு அடிபடுவதால் அ.தி.மு.க.வில் சீட் கேட்பவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.

2014, 2019, 2024 என மூன்று முறை வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில் தாமரை, இரட்டை இலை சின்னத்தில் நின்று ஒவ்வொரு தேர்தலிலும் நூறு கோடிகளைச் செலவு செய்தும் வெற்றிபெறாமல் தோல்வியைச் சந்தித்தவர் ஏ.சி.சண்முகம். வேலூர் தொகுதியில் சாதி ஓட்டு அதிகமாக இருப்பதால் எம்.எல்.ஏ. தேர்தலில் நின்று எம்.எல்.ஏ.வாகிவிடுங்கள் என அ.தி.மு.க.வினர் சிலர் அவரிடம் பேசிவருகின்றனர்.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி என அமித்ஷா சொல்லியுள்ளார். பா.ஜ.க. கோட்டாவில் அமைச்சராகிவிடலாம் என தூபம் போடுகின்றனர். அதே நேரத்தில் தனது மச்சான் ரவிக்குமாரை நிறுத்தலாமா என யோசிக்கிறார் என்கிறார்கள். தொடர்ந்து தி.மு.க.வே வெற்றிபெறும் இந்தத் தொகுதியை ஏ.சி.எஸ்.ஸுக்குத் தந்துவிட்டு, அதற்கு பதில் 10 தொகுதிகளின் தேர்தல் செலவை அவரிடம் ஒப்படைத்துவிடலாம் என கணக்கு போடுகிறார் இ.பி.எஸ். என்கிறார்கள்.

**-து.ராஜா**

# பெண் கைதிகளுடன் வாழும் குழந்தைகளின் உரிமை!



இந்தியாவில் பெண்கள் சிறை : அகில இந்திய சிறை சீர்திருத்தக் கமிட்டி 1982-83, 'சிறை மருத்துவமனைகளில் பெண்களுக்கு ஒரு தனி வார்டு இருக்கவேண்டும். ஒரு பெண் மருத்துவர் சிகிச்சை அளிக்கவேண்டும்' எனக் கூறியது.

1987-ல் நியமிக்கப்பட்ட நீதிபதி கிருஷ்ண ஐயர் கமிட்டி, சிறைகளில் பெண் கைதிகளின் குழந்தைகளுக்கான உரிமை குறித்து Model Prison Manual-லில் சேர்த்தது. 6 வயது வரையிலுள்ள குழந்தைகள் அவர்களுடனே தங்கிக்கொள்ளும் வகையில் அனைத்து மாநில/யூனியன் பிரதேச சிறைக் கையேடுகளைத் திருத்த வழிவகை செய்தது.

நாடாளுமன்ற நிலைக்குழுவின் துணைக் குழு, உள்துறை அமைச்சகத்திற்கு வழங்கிய பரிந்துரையின் படி (மத்திய அரசின் சுற்றறிக்கை சர்.17014/3/2009-PR, Dated: 17.07.2009) ஒவ்வொரு மாநிலத்திலும் பெண்களுக்கெனப் பிரத்யேகமாக குறைந்தபட்சம் ஒரு சிறைச்சாலையாவது உருவாக்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

மேனகா சஞ்சய்காந்தி மத்திய அமைச்சராக இருந்தபோது மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், 25.06.2018-ல் 'சிறைகளில் பெண்கள்' என்னும் தலைப்பில் இந்திய பெண் கைதிகளின் நிலை குறித்து வெளியிட்ட அறிக்கையில்

# தமிழகச் சிறைகளில் ரூ.500 கோடி ஊழல்!

'கைதிகள் மற்றும் அதிகாரிகளால் பெண் கைதிகளுக்கு ஏற்படும் பாலியல் வன்முறை உட்பட, சிறையில் அடைக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறை நாடு முழுவதும் பதிவாகியுள்ளது. இருப்பினும், குற்றவாளிகள் அதே இடத்தில் தங்கவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், இதுகுறித்து நடவடிக்கை எடுக்க கைதிகள் அச்சம்கொள்வதால், அதிகாரப்பூர்வ அறிக்கைகளில் இதுபற்றி கூறப்படுவதில்லை' எனக் குறிப்பிட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, இந்திய சிறைகளிலுள்ள பெண் கைதிகளுக்கு சிறந்த வாழ்க்கை நிலைமையை வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை சுற்றறிக்கை (No.16012/2/2018-PR, Dated: 2.11.2018) மூலம் மத்திய உள்துறை அமைச்சகம், மாநில அரசுகளுக்கு வழங்கியது.


நீதியரசர் கிருஷ்ணய்யர்

பாராளுமன்ற நிலைக்குழுவின் 245th Report Of Home Affairs On Prison -Conditions, Infrastructure And Reforms 24.08.2023, மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு வழங்கியிருக்கும் அறிவுரையில், 'பெண் கைதிகளிடம் பாலியல் பாகுபாடு பார்க்கக்கூடாது. பெண் கைதிகளுக்கு வழங்கியுள்ள சலுகைகள் அனைத்தும், பெண் பாலினம் கொண்ட திருநங்கைகளுக்கும் பொருந்தும்' எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் பெண் கைதிகளுக்காகப் பிரத்யேகமாக பெண்கள் சிறைகள் 15 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் ராஜஸ்தானில் (7), கேரளா (3), ஆந்திரப் பிரதேசம், பீகார், குஜராத், உத்தரப் பிரதேசம் மற்றும் டெல்லி (தலா 2), கர்நாடகா, மகாராஷ்டிரா, மிசோரம், ஒடிசா, பஞ்சாப், தெலுங்கானா மற்றும் மேற்கு வங்காளத்தில் (தலா 1) உள்ளன.


மேனகா சஞ்சய்காந்தி

பெண் கைதிகளைச் சிறையில் கண்ணியத்துடன் நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை Tokyo Rules of 1990-ஐ உருவாக்கியது. பெண் கைதிகளுக்கான சிறப்புத் தேவைகளையும், கர்ப்பமான பெண் கைதிகள் மற்றும் அவர்களது குழந்தைகள் சிறையில் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதையும், The Treatment of Women Prisoners and Non Custodial Measures for Women Offenders (The Bangkok Rules) December 2010-ல், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை வெளியிட்டது.


**உச்ச நீதிமன்ற வழக்குகள்:** R.D. Upadhyaya Vs State of Andhra Pradesh & Ors - பெண் கைதிகளில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் திருமணமாகி குழந்தைகளைப் பெற்றவர்கள். பெண்கள் கைது செய்யப்படும்போது அவர்களது குழந்தையைப் பராமரிக்க யாரும் இல்லை. அக்குழந்தைகள் எந்தக் குற்றமும் செய்யாமல் தண்டனைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இச்சூழ்நிலையில், அத்தகைய குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ப்பிற்கு, இந்தியா முழுமைக்குமான வழிகாட்டுதல்களை வழங்கவேண்டி, வழக்கறிஞர் ஆர்.டி. உபாத்யாயா மற்றும் பெண்கள் நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பெண்களுக்கான சட்ட நடவடிக்கை (WARLAW) அமைப்பு, இந்திய உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கினை (W.P. (Civil) No.559 of 1994) தாக்கல் செய்தது.

**உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் சுவாரஸ்யமான ஒரு பகுதி:** 20-1-2000-ல் பெண்களுக்கான பத்திரிகையில் Dogged by Death in Jail என்னும் தலைப்பில் கட்டுரை வெளியானது. பெங்களூர் பள்ளி ஒன்றில் படிக்கும் 6 வயது சிறுமி, அக்கட்டுரையை இணைத்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு 08.03.2000-ல் கடிதம் எழுதி அனுப்பினாள். அதனை இவ்வழக்கின் I.A.No.7 என உச்ச நீதிமன்றம் பதிவு செய்துகொண்டது. 20.03.2001-ல் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள சிறைகளில் பெண் கைதிகளின் குழந்தைகள் குறித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இவ்வழக்கின் இறுதியில் இந்திய சிறைகளில் தங்களது தாய்மார்களுடன் வாழும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விரிவான வழிகாட்டுதல்களை 13.04.2006-ல் வழங்கியது. இதனை மத்திய அரசின் சுற்றறிக்கை


www.nakkheeran.in

No.V -17013/9/2006 -PR, Dated: *15.05.2006-ன்படி அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்த அறிவுறுத்தியது. தமிழக அரசும் அரசாணை எண்: 1527, நாள்: 11.11.2008-ன்படி சிறை விதிகள் 963, 964/1983-ஐ புகுத்தியது.*

**உச்ச நீதிமன்ற வழக்கு -W.P.(Civil) No.406 Of 2013 (Re#Inhuman Conditions In 1382 Prisons)**: *இந்திய சிறைகளில் அதிகக் கூட்டம் உள்ளது குறித்து அனைத்து மாநிலங்களிலும் விசாரிக்க உத்தரவிட்டது. இது குறித்து மேற்கு வங்க மாநிலச் சிறைகளில் விசாரணை செய்து அறிக்கை அளிக்க,* amicus curiae *தபஸ்குமார் பன்ஜா என்ற வழக்கறிஞர் கொல்கத்தா உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் அளித்த அறிக்கையில், 'மேற்கு வங்கத்தில் பெண்களுக்கென 'அலிப்பூர் சீர்திருத்த இல்லம்' என்ற ஒரே ஒரு சிறை மட்டுமே உள்ளது. இம்மாநிலத்தின் மற்ற இடங்களில், 1,885 அல்லது அதற்கு மேற்பட்ட பெண் கைதிகள், ஆண்கள் சிறைச்சாலைகளின் தனித் தொகுதிகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அங்கு பணக்கார/சக்தி வாய்ந்த ஆண் கைதிகளுக்கு பெண் கைதிகள் சப்ளை செய்யப்பட்டு பாலியல் துஷ்பிரயோகம் நடந்ததால், இதுவரை 196 குழந்தைகள் சிறையில் பிறந்து, பெண் கைதிகளுடன் வசித்து வருகின்றனர். இதுகுறித்து வெளியே சொல்ல மிகவும் பயப்படுகிறார்கள்' எனக் கூறி ஒட்டுமொத்த தேசத்தையும் அதிரவைத்தார்.*


भारतीय संसद
PARLIAMENT OF INDIA

प्रेस विज्ञप्ति
PRESS RELEASE

राज्य सभा सचिवालय
RAJYA SABHA SECRETARIAT

PARLIAMENTARY STANDING COMMITTEE ON HOME AFFAIRS

PRESS RELEASE

The Department-related Parliamentary Standing Committee on Home Affairs Chaired by Shri Brijlal, M.P., Rajya Sabha, presented/laid its 245th Report on the subject 'Prison - Conditions, Infrastructure and Reforms' before both Houses of Parliament today i.e. 21st September, 2023. The Committee held 6 meetings on the subject and interacted with the representatives of the Ministry of Home Affairs, domain experts on the subject, and various State Governments. The Committee also collected information from all the States and Union Territories on the issues of Conditions, Infrastructure and Reforms in prison system. The Committee had considered the draft report and adopted the same in its meeting held on 24th August, 2023. The Recommendations/Observations made by the Committee in the Report are enclosed.

The Report is also available on https://sansad.in/rs >Committee>Department Related Standing Committee>Home Affairs>Report

பாராளுமன்ற நிலைக்குழு அறிக்கை குறித்து

*இது குறித்து தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உச்ச நீதிமன்றம்* I.A.No.36553/2024, dated:16.02.2024-*ஆக பதிவு செய்து, இக்குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மூத்த வழக்கறிஞர் கௌரவ் அகர்வாலை கேட்டுக்கொண்டது. அவர் விசாரணை செய்து அளித்த அறிக்கையை* WPA:7252/2018, dated:*20.02.2024-ஆக பதிவு செய்துகொண்ட உச்ச நீதிமன்றம், பெண் கைதிகளில் பெரும்பாலானோர் சிறையில் அடைக்கப்பட்ட நேரத்திலேயே கர்ப்பமாக இருந்தனர் எனக் கூறி வழக்கினை முடித்து வைத்தது.*

*கர்ப்பத்தைக் கலைப்பதற்கு பெண் சிறைக் கைதிக்கு உரிமை உள்ளதா? ஹலிமா* Vs *மத்தியப் பிரதேச மாநிலம்* (W.P.No.408/2013) *என்ற வழக்கில் 16.01.2013-லும்,* High Court on its own Motion Vs State of Maharashtra, *2017 என்ற பொதுநல வழக்கிலும், இரண்டு உயர் நீதிமன்றங்களும் ஒரு கர்ப்பிணிக் கைதி தனது கர்ப்பத்தைக் கலைக்க விரும்பினால், மருத்துவரது அறிக்கையின் பரிந்துரைப்படி,* The Medical Termination Of Pregnancy Act,1971-*ன் பிரிவு* 3(2)(b)(i) *அல்லது* (ii)-*ன்படி கலைத்துக்கொள்ள உரிமையுள்ளது என்றும், கைதியாக இருந்தாலும் மற்ற கர்ப்பிணிப் பெண்களுக்கு உள்ள உரிமை இவர்களுக்கும் பொருந்தும் எனக் கூறியுள்ளன.*

**தமிழ்நாடு:** *சிறைவிதிகளில் பகுதி: 44/1983, 43/2024-ல் பெண் கைதிகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. வேலூர் பிரெசிடென்சி பெண்கள் சிறை 15.04.1930-ல் தொடங்கப்பட்டது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்களில், ஒரு மாதத்துக்கும் மேலாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பெண் கைதிகள் இங்கு அனுமதிக்கப்பட்டனர் (சிறை விதி:942/1983). சுதந்திரத்திற்குப் பின், தமிழகத்தைச் சேர்ந்த கைதிகள் மட்டும் இங்கு அடைக்கப்படுகின்றனர்.*

*திருச்சி பெண்கள் தனிச்சிறை 04.05.1997-ல் தொடங்கப்பட்டது. ரீட்டா மேரி வழக்கில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால், தமிழகம் முழுவதும் பெண்களுக்கென தனிச்சிறைகள் ஏற்படுத்தப்பட்டன. சென்னை, கோவை, மதுரை என மேலும் 3 பெரிய சிறைகளும், கடலூர், விழுப்புரம், சேலம், தருமபுரி, திருப்பூர், திருவாரூர், நிலக்கோட்டை, பரமக்குடி, கொக்கிரக்குளம், தக்கலை ஆகிய ஊர்களில் 10 கிளைச் சிறைகளும் தற்போது செயல்பாட்டில் உள்ளன. இந்த 5 பெரிய பெண்கள் சிறைகளை, பெண் கண்காணிப்பாளர்களே நிர்வகிக்கவேண்டும் என* W.P.No:31223 Of *2024 என்ற பொதுநல வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.*

**(ஊழல் தொடர்ந்து கசியும்)**

**-ராம்கி**

www.nakkheeran.in




## (88) தோழரின் கண்ணீர்!

புகைப்படங்கள் எத்தனையோ கதைகளை எளிதாகச் சொல்லிவிடுகின்றன. இங்கு காணப்படும் புகைப்படமும் காலங்களைக் கடந்து வந்து ஒரு கதையைச் சொல்லுகிறது. புகைப்படத்தில் காணப்படும் இருவரும் பொதுவாக முழு காற்சட்டையும், கோட்டும் அணிபவர்கள் அல்ல. வேட்டியும் -சட்டையும் மட்டும் அணியக்கூடியவர்கள். இந்த வித்தியாசமான படத்தை ஏதாவது ஒரு குளிர்மிகுந்த அயல்நாட்டில்தான் எடுத்திருக்க வேண்டும். இந்த இருவரில் ஒருவர் தோழர் நல்லகண்ணு. மற்றவர் தோழர் எஸ்.ஜி. முருகையன். இருவரும் இந்தப் புகைப்படத்தை எடுத்துக்கொண்ட இடம் ரஷிய நாட்டின் தலைநகர் மாஸ்கோ.

அன்றைய நாட்களில் ரஷியா, சோவியத்து நாடு என்று அழைக்கப்பட்டது. பல மொழி பேசும் மக்களின் ஒன்றியம். அது மட்டுமல்லாது, உலகப் பொதுவுடமை இயக்கத்தின் கூடுதுறை. உலகில் வாழும் கம்யூனிஸ்டுகள் அனைவருக்குமான பயிற்சிப் பாசறை. மார்க்சீயத்தை கற்றுக் கொடுப்பதற்கென்று தனியாக அங்கு பல்கலைக்கழகம் இருந்தது. பூமி பரப்பெங்கும் செயல்பாட்டிலிருந்த, பொதுவுமை இயக்கங்கள், தங்கள் செயல்பாட்டாளர்களை தேர்வு செய்து, இங்கு அனுப்பிவைத்துக்கொண்டிருந்தனர். கடல் கடந்து, பல அழகிய சஞ்சிகைகளையும் மொழி பெயர்ப்பு நூல்களையும் சுமந்த கப்பல்கள் மூன்றாவது உலக நாடுகளின் துறைமுகங்களுக்கு வந்து சேர்ந்தன. அவை வியாபாரம் செய்ய வரவில்லை. மார்க்சீய நூல்களை வாசிக்க வைக்க வந்தன. அது மார்க்சீயக் கல்விக்கான உலகின் பொற்காலம் இது. இந்த சூழலில் தமிழ் நாட்டிலிருந்து, உயர் மார்க்சீயக் கல்வி கற்றுக் கொள்வதற்கென்று குழு ஒன்று, ரஷியாவிற்கு அனுப்பப்பட்டது. அதில் தோழர்கள் நல்லகண்ணு, எஸ்.ஜி.முருகையன் ஆகிய இருவரும் இடம்பெற்றிருந்தார்கள். இந்த இருவரும் ஒத்தஉருவம் கொண்டவர்கள். நாட்டுப்புறப் பண்பிலே ஊறி வளர்ந்தவர்கள். அவர்களிடம் அமைந்த தோழமையும் நாட்டுப்புறத் தன்மையிலேயே அமைந்திருந்தது.

தோழர் நல்லகண்ணு பார்வையில், தோழர் எஸ்.ஜி.முருகையனின் வாழ்க்கையை பல சந்தர்ப்பங்களில் நான் அறிந்திருக்கிறேன். ஒரு காவிய வாழ்க்கையை வாழ்ந்தவர் முருகையன். இந்த காவியத் தன்மையைப் பெறுவதற்கு, அதற்குள் பல்வேறு காரணங்கள் இருந்தன. மூர்க்கத்தனம்



-சி.மகேந்திரன்

www.nakkheeran.in

**தகுதியில்லாத இடத்தில் அன்பை செலுத்திவிட்டு ஏமாந்துவிட்டேன் என்று சொல்லாதே; தப்பித்துவிட்டேன் என்று மகிழ்ச்சி கொள்!**

கொண்ட பண்ணையார் உலகத்தில், ஒடுக்கப் பட்ட மக்களில் ஒருவராக பிறந்து, போராட்டங் களின் மூலம் தலைமைக்கு தன்னை தகுதிப்படுத் திக் கொள்வது அத்தனை எளியது அல்ல. தனித் துவம் கொண்ட போர்க்குணம், விடாமுயற்சி ஆகியவை இல்லாமல் அன்றைய காலத்தில் இத்தகைய சாதனையை நிகழ்த்தியிருக்க முடியாது. ஒரு எளிய மனிதரின் சாதாரண வாழ்க்கையிலிருந்து தொடங்கிய இவரது பயணம், சிகரத்தை தொட்டுவிட்ட நிலையில் தான் அந்த துயரம் நிகழ்ந்தது. இவை அனைத்தையும் உள்ளும், புறமும் அறிந்தவர் நல்லகண்ணு.

அந்த எளிய மனிதரின் வாழ்க்கை, அன்றைய தஞ்சை மாவட்டத்தின் முத்துப்பேட் டைக்கு அருகில் அமைந்த சித்தமல்லி என்னும் கிராமத்தில் பிறப்பெடுத்திருந்தது. அன்றைய, இவரது புறச்சூழல் இளம் வயதிலேயே இவரை ஒரு சமூக மாற்றத்திற்கான அர்ப்பணிப்பு மிக்க பணியை செய்யத் தூண்டியிருக்க வேண்டும். கால்நடையாக முத்துப்பேட்டைக்கு படிக்கச் சென்ற இவரால், உயர்நிலைக் கல்வியை முடிக்க முடியவில்லை. சமுதா யப் பிரச்சனைகள் இவரை அரசியலாய் கவ்விக் கொண்டன. பள்ளி இறுதித் தேர்வு வந்தது. சுற்றியிருந்த ஆதிக்க சக்திகள் தந்த நெருக்கடியில், இவர் தேர்வு எழுதுவதற்கு தடையும் வந்துசேர்ந்தது. ஆனால் முருகையன் அதைப்பற்றி கவலை கொள்ளவில்லை. சமூக மாற்றத்திற்கான பணியில் தன்னை முழு மையாக தயாரித்துக் கொள்ளும் தீவிரத்தில் இறங்கிவிட்டார்,

அதன்பின்னர் நொச்சியூர் ஊராட்சி மன்றத் தலைவ ரானார். ஆரம்ப காலத்திலேயே இவர் ஒரு கலகக்காரர். முதல் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர். இதன் பின்னர் கட்சியால் தேர்வு செய்யப்பட்ட கோட்டூர் ஒன்றிய பெருந்தலைவர். அன்றைய ஒன்றிய தலைவர் தேர்வுமுறை வேறாக இருந்தது. 1961ஆம் ஆண்டு தேர்தல். அன்றைய தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக வரமுடியாது. அந்த அளவிற்கு சாதியின் ஆதிக்கம் இருந்தது. இந்திய அளவில் முதலில் இந்த பதவிக்கு தேர்ந் தெடுக்கப்பட்டவர் என்ற பெருமையை இவர் பெற்றுக்கொண்டார். அப்பொழுதுதான் சிரமதான முருகையன் என்னும் பெயர் இவருக்கு வந்தது. முத்துப்பேட்டைக்கும் மன்னார்குடிக்கும் இடைப்பட்ட பகுதி சேறும் சகதியும் நிறைந்த பகுதி. இங்கு எந்த சாலை வசதியும் கிடையாது. இங்கு பாமினி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. இதன் கரையில் சாலை அமைக்க முடியும். இதற்கு திட்டம் போட்ட அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியவில்லை. பணம் இல்லை என்று கையை விரித்துவிட்டது.



தோழர் நல்லகண்ணுவுடன்
தோழர் எஸ்.ஜி.முருகையன்

அது தொழில்நுட்ப வசதி சிறிதுகூட இல்லாத காலம். இவர் மக்களைத் திரட்டி பெரும் பள்ளத்தை மேடாக்கி சாலையை அமைத்துக் காட்டினார். இன்றைய கணக்குப்படி மொத்தம் 45 கிலோமீட்டர் தூரம்.

ஒரு கட்டத்தில் தோழர் நல்லகண்ணுவுக்கும் அவருக்குமான ஆழ்ந்த தோழமையை புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அரசியலில் எத்தனையோ மாற்றங்கள். எத்தனையோ கூட்டணிகள். 1977 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி, எம்.ஜி.ஆர். உருவாக்கிய அண்ணா தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆகிய மூன்றும் ஒரணியில் நின்று போட்டியிட்டன. தமிழ்நாடு நாடாளுமன்றத் தொகுதிகளிலேயே கடும் போட்டி உள்ள தொகுதியாக நாகப்பட்டினம் கருதப்பட்டது. தோழர் நல்லகண்ணு, தேர்தல் பொறுப்பேற்று அங்கு வந்திருந்தார். நான் முதன்முதலில் பங்கேற்று பிரச்சாரம் செய்த தேர்தலும் அதுதான். அந்த இனிய நினைவுகள் ஒவ்வொன்றையும் இப்பொழுது நினைத்துப் பார்க்கிறேன். அந்த தேர்தலில் தோழர் எஸ்.ஜி.முருகையன் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு பெறுகிறார்.

வெற்றுபெற்று இரண்டு ஆண்டுகள் அப்பொழுது தான் முடிந்திருந்தது. இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் நெஞ்சம் பதறுகிறது. அவர் கொலை செய்யப் படுகிறார். அப்பொழுது 46 வயது முடிவடைந்திருந்தது. அவரது உடலில் மொத்தம் 32 கத்திக் குத்துகள். இதில் முதுகில் 8, நெஞ்சில் 25 குத்துகள். இது பற்றிய விபரங்களை பின்னர் மருத்துவ அறிக்கைகளின் மூலம் தெரிந்துகொள்ள முடிந்தது. முதலில் கழுத்தில் துண்டை போட்டு இறுக்கியிருக்கிறார்கள். மார்கழி பனிப்பொழிப்பு கொண்ட இரவு. எந்த இருளையும் கிழித்துக்கொண்டு ஒரு மின்னலைப் போல அச்சமற்று பயணம் செய்யும், அந்த மாவீரனுக்கு... அந்த இருள், உயிர் வாழ்க்கையையே இருளாக்கிவிட்டது.

அந்த காட்சியை என் மனக்கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்திப் பார்க்கிறேன். வெள்ளை நிறத்திலான வேட்டி சட்டை முழுவதும் ரத்தக் கறை. அந்த உடலுக்கு அருகில் ஒரு சோகம் நிறைந்த உருவம். பெரும் அழுகுரல் பெருக்கத்துக்கு இடையே அமைதியாக நின்று, தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து தன் கண்களில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கிறது. மாவீரன் முருகையனின் தோழமையும் நட்பும் அந்தக் கண்ணீரில் கரைந்து வழிந்துகொண்டிருந்தது. அந்தக் கண்ணீருக்குச் சொந்தக்காரர் தோழர் நல்லகண்ணு.

**(தொடரும்)**


Vol.38
Issue No:49
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : **nakkheeran2003@yahoo.com**
**nakkheeran2003@gmail.com**
இணையம்: **www.nakkheeran.in**



**முதன்மை பொறுப்பாசிரியர்: மாவலி**
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், ராம்கி

**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :** க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன், எம்.செந்தில்குமார், தா.மகாராஜன், சி.பிரான்சிஸ், பி.என்.ஆனந்த்

**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்

**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:** ச.ராஜேந்திரன்

**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**பிழை திருத்துவோர் :** து.கண்ணன், பார்த்திபன்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** பிரின்ஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**முதன்மை காசாளர் :** நித்தியானந்தன்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன், சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :**
ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம், யூனூஸ், பாண்டியன்

**Legal Manager : பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**

**Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch**

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.

# யாருக்கு சீட்டு?

ரகுபதி





## –புதுக்கோட்டை

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் மாவட்டத் தலைநகரிலுள்ள தொகுதி புதுக்கோட்டை. புதுக்கோட்டை மாநகர மக்களின் முக்கியமான பிரச்சனைகளை மாநகராட்சியே பார்த்துக்கொள்ளும் என்பதால் இந்த தொகுதியில் போட்டியிட தி.மு.க. - அ.தி.மு.க கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் இப்பவே தயாராகி அதற்கான வேலைகளில் இறங்கியுள்ளனர்.**

தொகுதி முழுவதும் குடிநீர் பிரச்சனை இருக்கிறது. மாநகரில் இணைக்கப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு இன்னும் அடிப்படை வசதிகள் கிடைக்கவில்லை. நாய்களின் தொல்லையால் பொதுமக்கள் அவதி இப்படி ஏராளமான பிரச்சனைகள் உள்ளன. குளங்களில் ஆக்கிரமிப்புகளால், மழைக்காலத்தில் மழைத்தண்ணீர் நகர்முழுவதும் தேங்கி நாற்றமெடுக்கிறது. மாநகராட்சி கலைஞர் பூங்கா, காந்தி பூங்கா உள்ளிட்ட பொழுதுபோக்கிடங்களில் கட்டணக் கொள்ளை என பொதுமக்கள் புகார் வாசித்துக்கொண்டிருந்தாலும் அதைப்பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

தற்போது, இந்தத் தொகுதியில் தி.மு.க.வைச் சேர்ந்த டாக்டர் முத்துராஜா எம்.எல்.ஏ.வாக உள்ளார். கடந்த முறை இந்த சீட்டுக்காக 15 வருட சர்வீஸ் இருக்கும்போதே தனது அரசு மருத்துவர் பணியை துறந்துவிட்டு வந்தவர். வெற்றிபெற்றதும் அமைச்சர் பதவியை எதிர்பார்த்தார் கிடைக்கவில்லை. ஆனாலும் யாருடனும் பிரச்சனை இல்லாமல் ஓட்டிக்கொண்டிருக்கிறார். அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று மக்கள் சந்திப்புகளை நடத்திக்கொண்டிருக்கிறார். மறுபடியும் நமக்கே சீட்டு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இவரிடம் உள்ளது.

ஆனால், திருமயம் தொகுதியில் தொடர்ந்து நடந்த தேர்தல்களில் மிகக்குறைந்த வாக்குகளில் வெற்றிபெற்று அமைச்சராகவும், தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளராகவும் உள்ள ரகுபதி 'எனக்கு டவுனில்தான் வீடு உள்ளது. அதனால் இந்த முறை எனக்கு புதுக்கோட்டை தொகுதியை கொடுங்கள்' என்று தலைமையை கேட்டுவருகிறார். அதேபோல மாநிலங்களவை உறுப்பினராக இருந்த எம்.எம்.அப்துல்லா மற்றொரு பக்கம் கிச்சன் கேபினட் மூலம் காய்நகர்த்திக் கொண்டிருக்கிறார்.

இன்னொரு பக்கம், தன்னை மாநகர மேயராக்கிய மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் நேரு இந்த முறை புதுக்கோட்டை தொகுதி வேட்பாளராகும் வாய்ப்பையும் பெற்றுக் கொடுப்பார் என்று மாநகர மேயர் திலகவதி செந்தில் காத்திருக்கிறார். விராலிமலை தொகுதியைச் சார்ந்தவரான வடக்கு மா.செ. செல்லப் பாண்டியன் எனக்கு விராலிமலையில் சீட் வேண்டாம். செலவு செய்யமுடியாது அதனால புதுக்கோட்டை தொகுதிக்கு வாய்ப்புக் கொடுக்கணும் என்று கேட்டுவருகிறார். இவர்கள் மட்டுமின்றி கடந்த முறை அ.தி.மு.க.வில் சீட்டு கொடுக்கப்பட்டு, தற்போது தி.மு.க.வில் இணைந்துகொண்ட கார்த்திக் தொண்டைமானும் தனக்கு தி.மு.க. சீட்டு தரும் என்கிறார். நைனா





www.nakkheeran.in

எம்.எம்.அப்துல்லா



முத்துராஜா



பர்வேஸ்



நெடுஞ்செழியன்





# போட்டாபோட்டி!



ராஜசேகர்



ராமச்சந்திரன்

முகமது, லியாக்கத் அலி, எம்.எம்.பாலு, சுப.சரவணன், வீரமணி என பலரும் சீட்டு கிடைக்குமென்ற கனவில் உள்ளனர்.

அ.தி.மு.க.வில் மாஜி நெடுஞ்செழியன், தற்போது இங்கே போட்டி அதிக மில்லை, சீட்டுக்காக போட்டிபோடக்கூடிய கார்த்திக் தொண்டைமானும் இல்லை, ராஜசேகரும் இல்லை. அதனால் இந்த முறை தனக்கு தலைமை சீட்டு கொடுக்கும் என்ற முழு நம்பிக்கையோடு ஓடிக்கொண்டிருக்க, மாநகரச் செயலாளர் பாஸ்கர் தனக்கு மா.செ. விஜயபாஸ்கர் சீட்டு வாங்கிக்கொடுப்பார் என்று அவர் கூடவே சுற்றிவருகிறார். அதேநேரத்தில் திருச்சி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்டு அதிக தொகை செலவழித்துவிட்டு இந்த புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியை யாவது கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டு விஜயபாஸ்கர் வீட்டிற்கு அடிக்கடி சென்றுவந்தவர், எடப்பாடி வருகையின்போது பல செலவுகளை அவர் ஏற்றுக்கொண்டார். அதேபோல கடந்த ஆட்சிக்காலத்தில் மாஜி வேலுமணியின் பினாமியாக செயல்பட்டு எல்.ஈ.டி., நெடுஞ்சாலை ஸ்டிக்கர், கொரோனா உபகரணங்கள் வாங்கியதில் முறைகேடு புகாரில், ரெய்டுகளில் சிக்கிய பழனிவேல், பணத்தை கட்டி வைத்துக்கொண்டு சீட்டு கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அதேநேரத்தில், பா.ஜ.க மேற்கு மா.த. ராமச்சந்திரனோ, “அ.தி.மு.க. கூட்டணியில் புதுக் கோட்டை மாவட்டத்தில் ஒரு தொகுதி ஒதுக்க வேண்டும். அது புதுக்கோட்டை தொகுதியாக இருக்கும். அந்த ஒதுக்கீட்டில் வரும் இந்த புதுக்கோட்டை தொகுதியில் எனக்குதான் சீட்டு கொடுப்பார்கள். செலவைப் பற்றி கவலையில்லை. எனக்கு சீட்டு கொடுத்தால் தி.மு.க.வில் அமைச்சர் ரகுபதிக்கே இங்கே சீட்டு கொடுத்தாலும் எதிர்த்துநின்று வெற்றிபெற்றுக் காட்டுவேன்” என்று கூறிவருகிறார். அதே கட்சியில் மாஜி வேலுமணி பினாமியாக இருந்து அ.தி.மு.க பிரமுகராகக் காட்டிக்கொண்டவரும், எல்.ஈ.டி. முறைகேட்டில் சிக்கி, கருப்பு முருகானந்தம் முன்னிலையில் பா.ஜ.க.வில் இணைந்தவரான முருகானந்தம், தனக்குத்தான் சீட்டு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்.

மற்றொரு பக்கம் தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் பர்வேஸ், விஜய் ரசிகர் மன்றத்திலிருந்தே நகராட்சி கவுன்சிலர் ஆகிட் டேன். இப்ப புதுக்கோட்டை தொகுதி வேட் பாளராக கட்சி என்னைத்தான் நிறுத்துவாங்க என்று வேலைகளில் ஆர்வம் காட்டி வருவதோடு, டிசம்பரில் புதுக்கோட்டை வரும் விஜய்க்கு அதிக கூட்டம் கூட்ட மும்முரம் காட்டுகிறார். ஓ.பி.எஸ். அணியில் மாஜி நகர்மன்றத் தலைவர் ராஜசேகர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் எப்படி சமாளிப்பது என்ற யோசனையில் இருக்கிறார். புதுக்கோட்டையில் சீட்டுக்கான ஓட்டம் தொடங்கிவிட்டது.

**-இரா.பகத்சிங்**

www.nakkheeran.in

திரும்பத் திரும்ப நினைக்கத் தோன்றும் கடந்த காலத்தின்
சில நினைவுகள்தான்... வாழ்வின் ‘வசந்த காலம்!’



எல்லம்மாள்

சுசிதா

**தா**ய், மகள் இரட்டைப் படுகொலையில், 24 மணி நேரத்தில் கொலையாளிகள் மூவரை கைது செய்து கெத்துக்காட்டியுள்ளது கிருஷ்ணகிரி காவல்துறை. கிருஷ்ணகிரியை அடுத்த பாஞ்சாலியூர் அருகேயுள்ள யாசின் நகர் பகுதியைச் சேர்ந்த எல்லம்மாள், மகள் சுசிதா, மகன் பெரியசாமியுடன் வசித்து வந்துள்ளார். கணவர் சுரேஷ் 2018ஆம் ஆண்டு இறந்துவிட்டார். விவசாயம் போக, வட்டிக்கு பணம் கொடுத்து சம்பாதிப்பது இவரது வழக்கம். இந்த நிலையில் தான் கடந்த 26ஆம் தேதி இவரும் இவரது மகளும் படுகொலை செய்யப்பட்டனர்.

“சாயந்திரம் 5 மணிக்கு வீட்டிற்கு போய்ப் பார்க்கும்போது சோபாவில் எல்லம்மாளும், தரையில் அவ மகள் சுசிதாவும் கழுத்தறுக்கப்பட்டு கிடந்தது தெரியவந்தது. பதட்டத்தில் கூச்சலிட்டேன். ஊர்க்காரங்க ஓடிவந்து பார்த்தாங்க.. போலீஸூம் வந்தது. அப்பத்தான் தெரிஞ்சது இரண்டு பேருக்கும் உசுரு இல்லைன்னு” என அழுதவாறு புலம்பினார் கொலையுண்ட எல்லம்மாளின் தம்பி மனைவி கிரிஜா.

சம்பவ இடத்திற்கு வந்த கிருஷ்ணகிரி தாலுகா போலீஸார் விசாரணை நடத்திய நிலையில், எஸ்.பி. தங்கதுரை, டி.எஸ்.பி. முரளி ஆகியோர் நேரில் சம்பவ இடத்திற்கு சென்று கொலைக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டனர். தொடர் விசாரணைக்காக மோப்ப நாய், கை ரேகை நிபுணர்கள், தடயவியல் துறையினர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கொலையுண்ட எல்லம்மாள் செல்போனை வைத்து கடந்த சில மாதங்களில், அவரிடம் பேசியவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டும், அந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை வைத்தும் விசாரணை நடத்தியது தாலுகா போலீஸ். விசாரணை மேலும் நகராமல் நிற்க, மாவட்ட எஸ்.பி. தங்கதுரை அறிவுரையின் பேரில் மாவட்ட காவல் நிலையங்களிலுள்ள அனைத்து டைரக்ட் எஸ்.ஐ.க்களும் சம்பவ இடத்திற்கு இரவோடு இரவாக வரவழைக்கப்பட்டனர். 7 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் குற்றவாளிகளை தீவிரமாக தேடி வந்தனர். இது இப்படியிருக்க, குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யாத காவல்துறையை கண்டித்து 27ஆம் தேதி மாலையில், உயிரிழந்த எல்லம்மாள், சுசிதா ஆகியோரின் சடலங்களை ஆர்.பூசாரிப்பட்டி கூட்ரோடு சாலையில் வைத்து, உறவினர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளையில் எல்லம்மாள் மற்றும் சுசிதா ஆகியோரை கொலை செய்தவர்கள் இவர்களென,

# பத்து வட்டிக்காக படுகொலையான தாய் மகள்!



## –கிருஷ்ணகிரி கொடூரம்!

நவீன்குமார்



ஹரீஷ்



சத்தியரசு



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் அடுத்த குரும்பப்பட்டி மோட்டூர் பகுதியை சேர்ந்த நவீன்குமார், சத்தியரசு மற்றும் காவேரிப்பட்டிணம் அண்ணா நகர் பகுதியை சேர்ந்த டிரைவர் ஹரிஷ் ஆகியோரை கைது செய்த கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை, “கொலையுண்ட எல்லம்மாளிடமிருந்து ரூபாய் 10,000 வட்டிக்கு பணம் வாங்கி, அதைக் கட்ட முடியாததால் எல்லம்மாளுக்கும் சத்தியரசுக்கும் தகராறு ஏற்பட்டு முன் விரோதம் இருந்துள்ளது. மேலும் எல்லம்மாளிடம் அதிகப்படியான நகை மற்றும் பணம் இருப்பது தெரிந்துகொண்டு அதை கொள்ளையடிக்கும் நோக்கத்திலும், மூவரும் திட்டமிட்டு எல்லம்மாளை கொலை செய்துள்ளனர். அப்போது சத்தம்கேட்டு வந்த எல்லம்மாளின் மகள் சுசிதாவையும் கொலை செய்துவிட்டு எல்லம்மாள் அணிந்திருந்த 10 சவரன் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். மேற்படி குற்றவாளிகளிடமிருந்து கத்தி, இருசக்கர வாகனம் மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 10 பவுன் நகை மீட்கப்பட்டுள்ளது”' என்றது.

‘‘இந்த இரட்டைப் படுகொலையில் துவக்கத்தில் திணறல் இருந்தது. எங்கள் அருகிலேயே இருந்து, விசாரணையின் போக்கை தனக்கு சாதகமாக மாற்றிக்கொண்டான் குற்றவாளி நவீன்குமார். எல்லம்மாளின் பக்கத்துவீட்டுப் பெண்ணை மணந்தவன், மாமியார் வீட்டிலேயே இருந்ததால் சந்தேகம் வரவில்லை. சி.சி.டி.வி.யில் இவனுடைய நண்பன் சத்தியரசு, வேன் டிரைவர் ஹரீஷ் ஆகியோருடன் எல்லம்மாள் வீட்டுக்கு சென்றது தெரியவந்தது. ஆனால் திரும்பவே இல்லை. இதுகுறித்து அவனிடம் விசாரித்தபோது பதிலில்லை. அவனது நண்பர்களைத் தூக்கவும் சத்தியரசு தனது ஆர்.சி.புக்கை அடகுவைத்து எல்லம்மாளிடம் 10 வட்டிக்கு 10,000 கடன் வாங்கி, அதை சரியாகத் திருப்பிக்கட்டாததால் கோபமடைந்த எல்லம்மாள், ஜாமீன் போட்ட நவீன்குமாரை திட்டித்தீர்த்ததில், ஹரீஷை துணைக்கு அழைத்து எல்லம்மாளை கொலை செய்ய வீட்டிற்கு வந்துள்ளனர்.

மதிய வேளையில் ஷோபாவிலேயே வைத்து கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளனர். கொலையை சிறுமி சுசிதா பார்த்த நிலையில் அவரையும் கழுத்தை அறுத்து கொலை செய்துவிட்டு.. அங்கிருந்த நகை, ரூ.50 ஆயிரத்தை எடுத்துக்கொண்டு வீட்டின் பின்புறம் வழியாக வெளியேறியுள்ளனர். பின்னர் காவேரிப்பட்டிணம் தென்பெண்ணை ஆற்றில் குளித்துவிட்டு ஆடைகளை மாற்றிக்கொண்டு அவரவர் வீட்டிற்கு சென்றுள்ளனர். மறுநாள், உதயம் பண்ட் லிமிடெட் என்ற அடகுக்கடைக்கு சென்று கொள்ளையடித்த 4 சவரன் செயினை மட்டும் அடகுவைத்து 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயை வாங்கியுள்ளனர். சி.சி.டி.வி. காட்சி தான் கொலைக்குற்றவாளிகளை அடையாளம் காட்டியது” என்றார் தனிப்படை அதிகாரி ஒருவர். 24 மணி நேரத்திலேயே கொலைக்குற்றவாளிகளை கண்டறிந்த தனிப்படையை பாராட்டியுள்ளார் மாவட்ட எஸ்.பி. தங்கதுரை.

–வேகா

படங்கள்:சத்யா

www.nakkheeran.in

# தி.மு.க. நிர்வாகிமீது பகீர் புகார்!

## –ஊட்டி சலசலப்பு!



ரவிக்குமார்

நீலகிரி மாவட்ட தி.மு.க.வின் துணைச் செயலாளராகவும், ஊட்டி நகராட்சியின் துணைத் தலைவராகவும் இருக்கும் ரவிக்குமாருக்கு எதிரான புகார்கள் ரெக்கைகட்டிப் பறக்கின்றன. இவருக்கு எதிரான பல புகார்கள் கோட்டைவரை நீண்டுள்ள நிலையில், இது குறித்து விசாரித்தபோது...

‘ஊட்டி டீ ஃபேக்டரிக்கு பின்புறம் கோரி சாலையில் மண் சரிவை தடுப்பதற்காக பிரமாண்டமான சுற்றுச்சுவர் கட்டப்படுகிறது. அந்த பகுதியில் மக்கள் வாழ்விடங்களோ, வணிக நிறுவனங்களோ எதுவும் இல்லை. ஆனால், ரவிக்குமாருக்கு சொந்தமான காட்டேஜ் உள்ளது. அந்த காட்டேஜின் பாதுகாப்புக்காக சுற்றுச்சுவர் எழுப்பப்படுகிறது. அவரது காட்டேஜின் பாதுகாப்புக்காக அவர் கட்டட்டும்; தவறு கிடையாது. ஆனால், அதற்கான செலவுகளை ரவிக்குமாரின் சொந்த பணத்திலிருந்து செய்ய வேண்டும்.

இதற்கு மாறாக, நகராட்சி நிதியிலிருந்து எடுக்கப்படுகிறது. அதாவது, நமக்கு நாமே திட்டத்திற்கு சொந்தமான நிதியிலிருந்து சுரண்டுகின்றனர். நமக்கு நாமே திட்டம் என்பது தமிழக அரசு 70 சதவீதமும், மக்கள் 30 சதவீதமும் என்கிற நிதிப்பகிர்வில் நிறைவேற்றப்படும் திட்டம். தனி நபரின் லாபத்துக்காக இந்த நிதியை பயன்படுத்தக்கூடாது.

ஆனால், இந்த சுற்றுச்சுவர் கட்டும் விசயத்தில் ரவிக்குமார் எனும் தனிநபருக்காக அரசு நிதியிலிருந்து சுமார் 1 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.




ஊட்டி நகராட்சி அலுவலகம்

இந்த பணிக்காக நகராட்சி கூட்டத்தில் எந்த விவாதமும் நடத்தப்படவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் தெரியவில்லை. கவுன்சிலின் எந்த அனுமதியையும் பெறவில்லை.

அதேபோல, ஊட்டி மெயின் பஜார் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான அரசு தொடக்கப்பள்ளி இருக்கிறது. இந்த பள்ளியில்தான் ரவிக்குமார் படித்தார். இந்த பள்ளிக்கு அருகே ரவிக்குமாருக்கு சொந்தமான லாட்ஜ் ஒன்று உள்ளது. அந்த லாட்ஜை யொட்டி அரசு பள்ளிக்குச் சொந்தமாக இருக்கும் நிலத்தை ஆக்ரமித்து வைத்திருக்கிறார்.

பள்ளி நிர்வாகம் இதுபற்றி நகராட்சிக்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கும் சில மாதங்களுக்கு முன்பு புகார் கொடுத்துள்ளது. நோ ஆக்ஷன். அவர் படித்த அரசு பள்ளியின் நிலத்தையே ரவிக்குமார் அபகரித்திருக்கிறார்’ என்று குற்றம்சாட்டுகின்றனர்.

நகராட்சி நிர்வாகமும், மாவட்ட நிர்வாகமும் ஆக்ஷன் எடுக்காத நிலையில், அறிவாலயத்துக்கும் கோட்டைக்கும் புகார்கள் பறந்துள்ளன.

இத்தகைய குற்றச்சாட்டுகள் குறித்து ரவிக்குமாரிடம் கேட்டபோது, ‘‘நகர வளர்ச்சிக்காக தனியாரின் பங்களிப்புடன் நகராட்சியும் இணைந்து செயல்படுத்தும் திட்டம்தான் ‘நமக்கு நாமே திட்டம்’. அதில் கூறப்பட்டுள்ள விதிகளின்படிதான் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. இதில் எந்த முறைகேடும் நடக்கவில்லை. அதேபோல எந்த ஒரு பள்ளியின் இடத்தையும் நான் ஆக்கிரமிக்கவில்லை’’ என்று மறுத்துப் பேசினார்.

இதற்கிடையே, ரவிக்குமாருக்கு எதிரான இந்த வில்லங்கம் குறித்து அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. தலைமைகளுக்கு அந்த கட்சிகளின் நிர்வாகிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

**–இளையர்**

**ஒருவனின் சொந்த தலைக்கனமே... அவரை எந்தச் சூழலிலும் வளரவிடாது!**

www.nakkheeran.in



# பிணநாயகன் விஜய்!

கரூர் துயரம் நடந்து 3 நாட்களுக்குப் பிறகு தனது முகத்தைக் காட்டியிருக்கிறார் விஜய். முகத்தை அப்பாவியாய் எப்படி வைத்துக் கொள்ளலாம் என மூன்று நாட்களும் ரிகர்சல் எடுத்துக்கொண்டிருந்திருக் கிறார். அப்படி ஒரு அப்பாவி முகத் தோற்றத்தில் காணொலியை வெளி யிட்ட விஜய், ''சி.எம். சார், பழி வாங்கவேண்டுமென்றால் என்னை என்ன வேண்டுமானாலும் செய் யுங்கள்; என் தொண்டர்களை விட்டு விடுங்கள்'' என்று சொல்லியிருப்பது, பலத்த கண்டனங்களை ஏற் படுத்தியிருக்கிறது.

நடத்திய தவறுகளுக்குப் பிராயசித்தம் தேடுவதற்கு எந்த முயற்சியும் அவரது பேச்சில் இல்லை. குறைந்தபட்சம், 'நடந்த துயரத்திற்கு நானே காரணமாகிவிட்டேன் ; இனி கவனமாக இருப்பேன்; என்னை மன்னித்துவிடுங்கள்' என பொறுப் பேற்கும் வகையில் ஒரு வார்த்தை கூட விஜய்யிடமிருந்து வரவில்லை. இது அவரது குரூர மனப்பான்மையைக் காட்டுகிறது. ஜனநாயகன் விஜய், பிணநாயகனாகியிருக்கிறார்.

பொறுப்பேற்கும் பொது புத்திகூட இல்லாத விஜய்யை, முதல்வர் பழிவாங்குகிறாராம். ஆப்ட்டரால் விஜய் ஒரு நடிகன். அவரை பழிவாங்க வேண்டிய அவசியம் முதல்வருக்கு என்ன இருக்கிறது? அவருக்கெல்லாம் நீ போட்டியா, என்ன? நான்சென்ஸ். அரசியல் கட்சியை துவக்கி, நாலு ரவுண்ட் வந்துவிட்டால் அவர் தலைவராகி விடுவாரா? முதல்வர் பழி வாங்குகிறார் என பைத்தியக்காரன்கூட சொல்லமாட்டான். ஆனால், விஜய் சொல்கிறார் எனில் அந்த பைத்தியத்திலும் பெரிய பைத்தியக்கார னாக இருக்கிறார் என்று தான் அர்த்தம்' என்கிற கண்டனங்கள் பெரும் பாலான ஜனநாயக சக்தி களிடமிருந்து எதிரொலித்த படி இருக்கிறது.

இந்த நிலையில், கரூர் துயரத்தை மையப்படுத்தி கூட்டணிக்குள் விஜய்யை இழுத்துக் கொண்டுவர பகீரதப் பிரயத்தனம்





**கேரளாவில் கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் பணியின்போது மூச்சுத்திணறி தமிழகத்தை சேர்ந்த 3 பேர் உயிரிழப்பு**

செய்திருக்கிறது பா.ஜ.க. இதற்காக டெல்லி எடுத்த அஸ்திரம் சி.பி.ஐ. விசாரணை.

இதுகுறித்து பா.ஜ.க.வின் மேலிட தொடர்பாளர்களிடம் விசாரித்தபோது, ''2026 சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க.தான் ஜெயிக்கும்; ஆட்சி மாற்றம் இல்லை என்கிற ரிப்போர்ட்தான் சமீபகாலமாக பா.ஜ.க. தலைமைக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் தகவல். இதனை ஜீரணிக்க முடியாவிட்டாலும் கள நிலவரத்தைப் புரிந்துகொண்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தி.மு.க.வை வீழ்த்த அ.தி.மு.க.வை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அது நிறைவேறாமல் இழுத்தபடியே இருக்கிறது.

இதனையடுத்து, விஜய்யை பா.ஜ.க. கூட்டணிக்குள் கொண்டு வர திட்டமிட்டனர். இதற்காக ஆர்.எஸ்.எஸ். சிந்தனையாளர்களை வைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், அடிப்படையில் தான் யார் என்பதை அவர்களிடம் மனம் திறந்த விஜய், 'இயற்கையாகவே உங்களுடன் இணைவதற்கு சாத்தியமில்லை; என்னைச் சுற்றியிருப்பவர்களை வைத்து நீங்களே ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்கே தெரியும்' என, தான் யார் என்பதை மறைமுகமாக உணர்த்தினார் விஜய்.

அவரது திமிர்த்தனமான பேச்சினை ஜீரணித்துக்கொண்ட பா.ஜ.க., நேரம் வரும்போது விஜய்யை டீல் செய்துகொள்ளலாம் என அமைதியானது. இதனால், 2026-ல் தி.மு.க.வை வீழ்த்துவதை விட, 15 எம்.எல்.ஏ.க்களாவது பா.ஜ.க.விலிருந்து இந்தமுறை சட்டப்பேரவைக்குள் நுழைய வேண்டும் என்கிற மனநிலைக்கு வந்து அதற்கேற்ப காய்களை நகர்த்தத் தொடங்கியது

இப்படிப்பட்ட சூழலில்தான் கரூர் துயரம் நடக்க, விஜய்யை தூக்கினால் தி.மு.க.வை வீழ்த்திவிடலாம்; தமிழகத்தில் கூட்டணி ஆட்சியை கொண்டுவந்துவிட முடியும் என கணக்கிட்ட தமிழக மாஜி தலைவர் அ.மலை, அவசரம் அவசரமாக களத்தில் குதித்தார், டெல்லியை தொடர்புகொண்டார். பகீரத முயற்சியில் அமித்ஷாவிடம் பேசும் வாய்ப்பு அ.மலைக்குக் கிடைத்தது. 'விஜய்யை நான் கொண்டுவருகிறேன்' என வழக்கம்போல உதார்விட்டார். 'முயற்சித்துப் பாருங்களேன்' என சொன்னது டெல்லி. இதனையடுத்து, விஜய்யிடம் பேசியிருக்கிறார் அ.மலை.

இப்போதெல்லாம் பயந்துபோய்க் கிடக்கும் விஜய், எதைத் தின்றால் பித்தம் தெளியும் கதையாக, முக்கிய நபர்கள் யார் தொடர்பு கொண்டாலும் உடனே பேசுகிறார் (கரூர் துயரத்திற்கு முன்பு வரை, தன்னை ஒரு ஜெயலலிதாவாகவே வரிந்து கட்டிக்கொண்டு அவரது மனநிலையில் இருந்துவந்தார் விஜய். எவ்வளவு பெரிய அரசியல் தலைவராக இருந்தாலும் அவர்களிடம் பேச மறுத்துவிடுவார். அவரது தொடர்பு கிடைக்க பலநாள் காத்திருக்க வேண்டும். அவ்வளவு மமதை).



அமித்ஷா

அந்த வகையில், விஜய்யுடன் பேசினார் அ.மலை. ஆனால், பெரிய அளவில் இதற்கு பிடிகொடுக்கவில்லை விஜய். அதேசமயம், டெல்லியும் தனது ரூட்டில் முயற்சித்தது. அதாவது, அமித்ஷாவின் நம்பிக்கைக்குரிய முக்கிய பிரமுகர் ஒருவர், விஜய்யிடம் பேசி எதார்த்தத்தை புரிய வைத்திருக்கிறார்.

அப்போது, 'டெல்லியின் சப்போர்ட் உங்களுக்கு இல்லையெனில், அருணா ஜெகதீசன் கமிசனின் ரிப்போர்ட்டை அடுத்த ஒரு மாதத்தில் பெற்று, அதனடிப்படையில் உங்களையும் வழக்கில் சேர்த்து கைதுசெய்ய தி.மு.க. அரசு கொஞ்சம்கூட தாமதிக்காது.

அந்த சூழல் வந்தால், ஒரு நாள்; ஒரு பொழுதுகூட உங்களால் ஜெயிலில் இருக்க முடியாது. உங்க கட்சிக்குத் தடை விதிக்கச் சொல்லி தேர்தல் ஆணையத்திலும் நீதிமன்றத்திலும் தி.மு.க. முறையிடும். அப்போது டெல்லியும் இதற்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்தால், உங்கள் எதிர்காலம் என்ன? என்பதை யோசித்துக் கொள்ளுங்கள். பா.ஜ.க. தேசியத் தலைமையின் ஆதரவு இல்லாமல் உங்களால் இனி அரசியல் செய்ய முடியாது. டெல்லியின் விருப்பம்ங்கிறது, பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணிக்கு நீங்கள் வரவேண்டும். குறிப்பாக, பா.ஜ.க.





வழியாக வரவேண்டும் என்பதுதான்" என விரிவாகப் பேசி அழுத்தம் கொடுத்துள்ளார் அந்த பிரமுகர்.

இது ஒரு வகையில் அழுத்தமான மிரட்டல்தான். இதில் விஜய்யின் சப்தநாடியும் ஒடுங்கிப்போயிருக்கிறது. ஒருவேளை விஜய் எதிர்பார்க்கிற சி.பி.ஐ. என்கொயரிக்கு நீதிமன்றம் பரிந்துரைத்தாலும், டெல்லியின் ஆதரவு இல்லையெனில், சி.பி.ஐ. என்கொயரி கூட விஜய்க்கு எதிராகப் போகலாம். அதுவே ஆதரவு இருந்தது எனில், என்கொயரி விஜய்க்கு சாதகமாகவும் அமையலாம். இதெல்லாம் சொல்லப்பட்டதும், வேறு வழியில்லாமல் டெல்லியின் விருப்பத்துக்கு ஓ.கே. சொன்ன விஜய், 'ஆனால் இப்போதைக்கு என்னால் வெளிப்படையாக சொல்ல முடியாது; நேரம் வரும் போது இதனை (கூட்டணி) அறிவிக்கிறேன். இதற்கு நீங்கள் சம்மதியுங்கள்' என தெரிவித்திருக்கிறார். இந்த விசயங்கள் எதுவும், விஜய்க்கு ஆலோசகர்கள் என சொல்லிக்கொண்டு அவரை தவறாக வழிநடத்தும் கோஷ்டிகளுக்குக் கூட தெரியாது. அந்தளவுக்கு ஒன் டூ ஒன் என்றளவில் பேசி முடித்திருக்கிறது டெல்லி. இதனையடுத்துத்தான், கரூர் துயரத்துக்கு யார் காரணம்? என ஹேமமாலினி தலைமையில் பா.ஜ.க.வின் தோழமை கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் குழுவை அனுப்பி வைத்தது டெல்லி.



இதற்கிடையே, 'அ.தி.மு.க. எடப்பாடி பழனிச்சாமியை தொடர்பு கொண்டு கூட்டணி, சீட் பகிர்வு குறித்து புதிதாக ஒரு எண்ணிக்கையை மையப்படுத்தி பேச்சுவார்த்தையையும் தொடங்கியிருக்கிறார் அமித்ஷா. அப்போது சொல்லப்பட்ட விசயங்கள், எடப்பாடிக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது' என்று விரிவாக சுட்டிக்காட்டுகின்றனர் மேலிட தொடர்பாளர்கள்.

இதுகுறித்து அ.தி.மு.க. தரப்பில் விசாரித்தபோது, கரூர் சம்பவத்தை வைத்து தன்னையும் தனது கட்சியையும் முடக்க தி.மு.க. திட்டமிடுவதாக நினைக்கும் விஜய், ஒரு சிக்கலான சூழலில் தனக்காக எடப்பாடி குரல் கொடுத்தார் என்பதை கணக்கில் கொண்டிருக்கிறார். இனி தி.மு.க.வை எதிர்க்க வேண்டுமெனில், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வின் உதவி அவசியம் எனவும் உணர்ந்துள்ளார்.

இதனையடுத்து, எடப்பாடியிடம் விஜய் தரப்பில் பேசப்பட்டிருக்கிறது. அப்போது, விஜய்யை பா.ஜ.க. இழுக்கிறது என ஏற்கனவே அறிந்திருக்கும் எடப்பாடி, அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணிக்கு நம் மூலமாகத்தான் விஜய் வரவேண்டும் என்கிற திட்டத்தை ஆலோசித்தார். கரூர் சம்பவத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியில் தத்தளிக்கும் விஜய், எப்படியும் கூட்டணிக்கு வந்துவிடுவார் எனும் யோசனையில் இருந்தார். அதற்கேற்ப விஜய் தரப்பிலிருந்து பேச முயற்சித்த நிலையில், '25 சீட் வரை தரலாம்; மற்றதை பிறகு பேசிக்கொள்ளலாம்... சம்மதமா?' என்றிருக்கிறார் எடப்பாடி. அதற்கு விஜய் தரப்பினர் எதுவும் சொல்லவில்லை.

அதேசமயம், ஏற்கனவே விஜய்யை கூட்டணியில் சேர்ப்பது தொடர்பாக எடப்பாடியிடம் பேசிய அமித்ஷா, "தேசிய ஜனநாயக கூட்டணிக்குள் விஜய்யை கொண்டு வருவது எங்கள் பொறுப்பு. மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 134 தொகுதிகளை அ.தி.மு.க. வைத்துக்கொள்ளலாம். மீதமுள்ள 100 தொகுதிகளை பா.ஜ.க.விடம் ஒப்படைத்து விடுங்கள். விஜய் உட்பட மற்றவர்களுக்கு நாங்கள் சீட் ஒதுக்கிக் கொடுக்கிறோம்" என சொன்னதில் ஏக அப்-செட்டானார் எடப்பாடி.

மேலும், மத்திய அரசு அனுப்பி வைத்த ஹேமமாலினி தலைமையிலான எம்.பி.க்கள் குழுவில் அ.தி.மு.க. எம்.பி.க்கள் யாரும் இல்லாதது எடப்பாடிக்கு வருத்தம். இந்தச் சூழலில், 'கூட்டணிக்குள் கூட்டணி போடும் விதமாக சீட் பேரங்களை விஜய்க்காக டெல்லி தொடங்கியிருப்பதும் எடப்பாடிக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது' என்கின்றனர் அ.தி.மு.க. சீனியர்கள்.

கரூர் துயரத்தை வைத்து நெருக்கியதில் பா.ஜ.க.விடம் சரணடைந்திருக்கிறார் விஜய். ஆனால், யார் மூலம் கூட்டணிக்குள் அவர் வரவேண்டும் என்பதில் பா.ஜ.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் இடையே குஸ்திகள் தொடங்கியிருக்கின்றன.

**-இரா.இளையசெல்வன்**

www.nakkheeran.in

# பாலியல் பலாத்காரம் செய்த காவலர்கள்! கொந்தளிப்பில் கோவில் நகரம்!



சுரேஷ்ராஜ்

சுந்தர்

திருவண்ணாமலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இரவில் கிரிவலம் வந்துவிட்டு பகலில் அண்ணாமலையாரை தரிசனம் செய்கிறார்கள். பக்தர்களுக்கு வழிகாட்டியாக, பாதுகாப்பாக திருவண்ணாமலை பகுதி மக்களும், காவல்துறையும் இருந்துவரும் நிலையில், இரண்டு காவலர்கள் செய்த செயல் ஆன்மிக நகரத்தை தலைகுனிய செய்துள்ளது.

செப்டம்பர் 30ஆம் தேதி விடியற்காலையில், திருவண்ணாமலை மாநகரத்துக்குட்பட்ட ஏந்தல் கிராமத்திலிருந்து 108 ஆம்புலன்ஸ்க்கு ஒருவர் போன் செய்து வரவைத்து இரு பெண்களை மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளார். திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்ட 18 வயது இளம்பெண்ணின் பெண்ணுறுப்பு, மார்பகம் சிவந்துபோயிருந்தது. அவர்களிடம் மருத்துவர்கள் விசாரித்தபோது, “இரண்டு போலீஸ்காரங்க என் மகள் மீனாட்சியை (பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது)ரேப் செய்துட்டாங்க'' எனச்சொல்ல மருத்துவர்கள் அதிர்ச்சியாகிவிட்டனர்.

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுதாகருக்கு அந்த தகவல் சொல்லப்பட, மருத்துவமனைக்கு ஓடிவந்த போலீஸ் அதிகாரிகள் நடத்திய விசாரணையில், “நாங்க ஆந்திர மாநிலம் சித்தூர். எங்க சொந்தக்காரர் ஒருவர் அடிக்கடி வாழைத்தார்களை ஏத்திக்கிட்டு திருவண்ணாமலைக்கு வருவாரு. எனக்கும், என் மகளுக்கும் திருவண்ணாமலை கோவிலுக்கு வரணும்னு ஆசை. நான் கூட்டிட்டுபோறேன்னு சொல்லி வண்டியில அழைச்சிக்கிட்டு வந்தார். திருவண்ணாமலைக்கு வரும்போது இரண்டு போலீஸ்காரங்க எங்க வண்டிய தடுத்து நிறுத்தி விசாரிச்சாங்க. உங்களப் பார்த்தா சந்தேகமா இருக்குன்னு சொல்லி, கீழ இறங்கச் சொன்னாங்க. வண்டிய எடுத்துக்கிட்டு அவனை போகச்சொன்னாங்க, அவன் போகமாட்டேன்னு சொன்னான். அவனை அடிச்சி துரத்திட்டு, ‘கோவிலுக்கு நாங்க


சம்பவம் நடந்த இடம்

கொண்டுபோய் விடறோம், நீ பொருளை இறக்கிட்டு ஸ்டேஷனுக்கு வா'ன்னு சொல்லி அவனை அனுப்பிட்டாங்க.

அதுக்கு பிறகு என் மகளை ஒருத்தரும், என்னை ஒருத்தரும் வண்டியில உட்காரவச்சி எங்கயோ அழைச்சிக்கிட்டு போய் ஒரு சுடுகாட்டுக்கு பக்கத்தில் வச்சி என் மகளை ஒருத்தர் மாத்தி, ஒருத்தர்னு இரண்டு போலீஸ்காரங்களும் நாசம் பண்ணாங்க. ஒரு மணி நேரம் அவுங்களோட போராடி என் மகள் முடியாம மயக்கமாகிட்டாள். எங்களை அங்கயே விட்டுட்டு போய்ட்டாங்க. நான் ரோட்டுக்கு ஓடிவந்து லைட் எரிஞ்ச இடத்துக்கு ஓடினேன். அங்க செங்கல் செய்துக்கிட்டு இருந்தவங்க எங்களை காப்பத்தி ஒரு மணி நேரத்துக்கு பிறகு ஆம்புலன்ஸ் வரவச்சி அனுப்பி வச்சாங்க'' என வடக்கு மண்டல ஐஜி. அஸ்ராகார்க், திருவண்ணாமலை மாவட்ட எஸ்.பி. சுதாகரிடம் கூறினர்.

திருவண்ணாமலை நகர ஏ.எஸ்.பி. சதீஷ் தலைமையிலான படையினர், திருவண்ணா மலை நகர கிழக்கு காவல்நிலையத்தின் கட்டுப்பாட்டில் வரக்கூடிய ஏந்தல் கிராமப்பகுதியில் ரோந்துபோன போலீஸார் யார் என டூட்டி ரிஜிஸ்டர் பார்த்தபோது, முதல்நிலை காவலர் சுந்தர், காவலர் சுரேஷ்ராஜ் என்பது தெரிந்தது. அவர்களை தூக்கிவந்து விசாரித்தபோது, குற்றங்களை ஒப்புக்கொண் டனர். பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்ணின் தாயாரை சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்று உறுதி செய்தனர்.

இதுகுறித்து போலீஸ் வட்டாரத்தில் விசாரித்தபோது, "டூட்டி நேரத்தில் இருவரும் சேர்ந்து சரக்கடித்துவிட்டு ரோந்து சென்றுள்ளனர். வண்டியில் பெண்களை பார்த்ததும் தப்பான பெண்கள் என நினைத்து மிரட்டி அழைத்துச் சென்று பலாத்காரம் செய்துள்ளார்கள். சுரேஷ்ராஜ் வேட்டவலத்தை சேர்ந்தவர், சுந்தர் விழுப் புரம் மாவட்டத்திலுள்ள சூரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவன். ஒழுங்கு நடவடிக்கையாக விழுப்புரம் மண்டலத்திலிருந்து திருவண்ணாமலைக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டவர். இருவரும் டூட்டி முடிந்ததும் ஒன்றாகத்தான் சுத்துவார்கள். இவர்களை கண்காணிக்கவேண்டிய முக்கிய காவல்துறை அதிகாரியே இரவு 7 மணியானதுமே போதையை நாடுகிறார்'' என்கிறார்கள். சமூக ஆர்வலர்களோ, "புகாரளிப்பதற்காக, அரசாங்கம் காவல்துறை அதிகாரிகளுக்கு சி.யு.ஜி. நம்பர் தந்துள்ளது. அந்த எண்தான் மக்களிடமும் தரப்பட்டுள்ளது. அந்த எண்களை பெரும்பாலான அதிகாரிகள் பயன்படுத்துவதேயில்லை. இதனால் மக்களால் போலீஸை தொடர்புகொள்ள முடியவில்லை" எனக் குற்றம்சாட்டுகிறார்கள்.

அரசியல் அமைப்புகள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். நேரடியாக வந்து மாநில மகளிர் ஆணையம் விசாரணை நடத்தியது. ஆந்திர காவல்துறையின் ஒரு டீமும் விசாரித்துவிட்டு சென்றுள்ளது.

**-து.ராஜா**

படங்கள்: எம்.ஆர்.விவேகானந்தன்



## இறுதிச் சுற்று
## "இந்தியாவை மீட்கவேண்டும்"
### -முதல்வர் ஸ்டாலின் டுவிட்!

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நூற்றாண்டை முன்னிட்டு அஞ்சல் தலை மற்றும் நினைவு நாணயத்தை, காந்தி பிறந்த அக்டோபர் 2ஆம் தேதி பிரதமர் மோடி வெளியிட்டார். இதனை கடுமையாக விமர்சித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், "நமது இந்தியா, அனைத்து மத மக்களுக்குமான மதச்சார்பற்ற நாடு எனும் அடிப்படைத் தத்துவத்திற்கு வித்திட்டவர் அண்ணல் காந்தியடிகள். மக்களிடையே வெறுப்பின் விதைகள் தூவப்பட்டு, பிரித்தாளும் சக்திகள் தலைதூக்கும்போதெல்லாம் அவற்றை எதிர்கொள்ளும் வலிமையை நமக்கு என்றும் வழங்கும் ஆற்றல் அவர். நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல் தலையும், நினைவு நாணயமும் வெளியிடும் அவலநிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும். இதுவே காந்தியடிகளின் பிறந்தநாளில் நாட்டு மக்கள் அனைவரும் ஏற்கவேண்டிய உறுதி மொழி'' என்று குறிப்பிட்டுள்ளார். **-கீரன்**

# அமித்ஷா ஆபரேஷன்!

# சரண்டரான விஜய்!

ஜோசப் விஜய் மெல்ல மெல்ல லோட்டஸ் விஜய் ஆகிவிட்டார். இந்த ஆபரேஷனுக்கு திட்டம் தீட்டி செயல்படுத்துபவர் சாட்சாத் அமித்ஷாதான். விஜய்க்கு கட்சி ஆரம்பித்து சாதாரணமாக இருக்கும் போதே Y பிரிவு பாதுகாப்பு கொடுத்து அவரை கவர முயற்சித்தது பா.ஜ.க. இப்பொழுது கரூர் பிரச்சனையை ஒட்டி புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். புஸ்ஸி ஆனந்த் ஏற்காடு மலை ரிசார்ட்டில் பதுங்கியிருந்தபோது அவரை போலீஸ் நெருங்கிவிட்டது. அவரிடமே தொலைபேசியில் உரையாடி 'நீங்கள் இங்கே இருப்பது தெரியும்' என போலீசார் சொல்லிவிட்டனர். புஸ்ஸி ஆனந்தின் குடும்பம் நேரடியாக விஜய்யை சந்தித்து அழுதது. அதேபோல் நிர்மல்குமாரின் இருப்பிடத்தையும் போலீசார் கண்டுபிடித்தனர். ஆதவ் அர்ஜுனா, 'நேபாளம் மாதிரி புரட்சி வெடிக்கும்' என போட்ட ட்வீட்டை ஒட்டி அவர் மீது FIR பதிவு செய்த சென்னை நகர சைபர் க்ரைம் போலீசார் அந்த ட்வீட்டை அவர் டெலிட் செய்துவிட்டபோதும், அவரைத் தேடி அவரது போயஸ் கார்டன் வீட்டை சுற்றிவந்தார்கள்.

இப்படி விஜய்க்கு நெருக்கமானவர்களெல்லாம் போலீஸ் பிடியில் சிக்குவதை விஜய் விரும்பவில்லை. கொலம்பியா நாட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ராகுல் காந்தியிடம் பேசி, தன் மீது வழக்குப் பதியாமல் பார்த்துக்கொண்ட விஜய்யால், தனது நெருங்கிய சகாக்கள் போலீசாரால் வேட்டையாடப்படுவதை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதற்காக மீண்டும் ராகுலிடம் பேச முயற்சிக்க, 'அவர்களை நாங்கள் இப்பொழுது கைது செய்யமாட்டோம். அவர்கள் முன்ஜாமீன் வாங்க நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார்கள். முன்ஜாமீன் தீர்ப்பு வரும் வரை அவர்களைக் கைது செய்யமாட்டோம்' என மாநில அரசு சொன்னதாக ராகுல் தரப்பால் விஜய்க்கு சொல்லப்பட்டது. விஜய் தனது வீடியோவில் குறிப்பிட்ட 'என்னைக் கைது செய்யுங்கள், என்



சகாக்களை விட்டுவிடுங்கள்' என்ற அந்த பகுதி ராகுல்காந்தியிடம், விஜய் வைத்த கோரிக்கை என்கிறார்கள் விஜய்க்கு நெருக்க மானவர்கள்.

தினமும் வியூக அமைப் பாளர் ஜான்ஆரோக்கியத்திடம் பேசும் விஜய், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க.வுடன் நாம் இணைந்தால் என்ன நடக்கும் என சாதக பாதகங்களை விவாதித்திருக்கிறார். அ.தி.மு.க., பா.ஜ.க., த.வெ.க., அன்புமணி பா.ம.க., தே.மு.தி.க. இணைந்து ஒரு கூட்டணியை உருவாக்கலாம். மேலும் கரூர் சம்பவம் தி.மு.க.வின் திட்டமிட்ட சதியால் உருவானது என வீடியோக்கள் மூலம் உறுதிப்படுத்தலாம் என ஜான் சொன்ன ஆலோசனையைக் கேள்விப்பட்ட தி.மு.க. அரசு, உடனடியாக அமுதா IASயை களமிறக்கி அரசு தரப்பிலிருந்து வீடியோக்களை வெளியிட்டது. செந்தில் பாலாஜி தனது விளக்கமாக ஒருமணி நேர பிரஸ் மீட்டை நடத்தினார். தி.மு.க. கைது நட வடிக்கைகளில் தீவிரம் காட்டவில்லையே தவிர, கரூர் சம்பவம் விஜய்யின் சைக்கோத்தனத்தால் ஏற்பட்டது என்கிற பிரச்சாரத்தில் பெருமளவில் வெற்றி பெற்றது. இதை கவனித்த மத்திய அரசு, முனைப்பாக ஹேமமாலினி தலைமையில் எம்.பி.க்கள் குழுவை கரூருக்கு அனுப்பியது. பிரதமர் மோடியே கரூருக்கு வருவதாக இருந்தது. மோடிக்குப் பதில் நிர்மலா சீதாராமன் கரூருக்கு அனுப்பப்பட்டார்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைகள் விஜய்க்கு ஆறுதலாக இருந்தது. உடனடியாக ஆதவ் அர்ஜுன் டெல்லிக்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கு பா.ஜ.க. தலைவர்களுடன் பேசி வருகிறார். இறுதியாக அ.தி.மு.க. கூட்டணியில் த.வெ.கவுக்கு 25 சீட்டுகள் என்பதுவரை தற்பொழுது பேசப்பட்டு வருகிறது. நீதிமன்ற விசாரணை பெரிதானால் சுப்ரீம் கோர்ட்டில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். சி.பி.ஐ. விசாரணை வந்துவிட்டால் விவகாரம் கிணற்றில் போட்ட கல் போல ஆகிவிடும் என்ற ஒரு உறுதி விஜய்க்கு பா.ஜ.க. தரப்பில் தரப்பட்டுள்ளது. இதற்கிடையே, இறந்தவர்களுக்கு 20 லட்சம் ரூபாய் த.வெ.க. தரப்பில் தரப்படும் என அறிவிக்கப்பட்டது பற்றி யாரும் கண்டு கொள்ளவில்லை.

இந்தப் பிரச்னையிலிருந்து எப்படி வெளியே வருவது என்பதுதான் விஜய் தரப்பின் கவலையாக இருக்கிறது. சட்டமன்றத் தேர்தலில் சீட்டு எண்ணிக்கை வரை போன பா.ஜ.க. கூட்டணி விவகாரங்களை நயினார் நாகேந்திர னும் அ..மலையும் இணைந்து முன்னெடுக்கிறார் கள். கூட்ட நெரிசலில் சிக்கி செத்ததை சதித்திட்டம் எனச்சொல்லும் அவலம் மெல்ல மெல்ல அரங்கேறிக் கொண்டுள்ளது என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள்.

**–தாமோதரன் பிரகாஷ்**

## இறுதிச் சுற்று!
## திருமா ஆவேசம்



அக்டோபர் 2ஆம் தேதி, வியாழனன்று திருச்சியில் செய்தியாளர்களை சந்தித்த வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன், ''விஜய், பா.ஜ.க. தூண்டுதல் காரணமாகவே அரசியலுக்கு வந்தார். தி.மு.க.வின் சிறுபான்மையினர் வாக்கை விஜய் மூலமாகப் பிரிப்பதே பா.ஜ.க.வின் திட்டம். அன்னாஹசாரேவை போல் விஜய்யை பா.ஜ.க. பயன்படுத்துகிறது. விஜயை பயன்படுத்தி அ.தி.மு.க.வை அழித்துவிட்டு அந்த இடத்துக்கு வர பா.ஜ.க. முயற்சிக்கிறது. விஜய், 3 நாட்கள் சும்மா இருந்துவிட்டு, ஆர்.எஸ்.எஸ். தலைமை சொன்னவுடன் வீடியோ வெளியிடுகிறார். ஹஸ்கி வாய்ஸில் பேசினால் சோகம் என நம்பிவிடுவார்கள் என நினைத்து விஜய் அப்படி பேசியுள்ளார். விஜய் மாதிரியான ஆபத்தான சக்தியிடம் சிக்கினால், தமிழகம் கலவர பூமியாகிவிடும். கரூர் துயரச் சம்பவத்திலிருந்து விஜய்யின் கொள்கை எதிரியான பா.ஜ.க.வே அவரை பாதுகாக்க நினைக்கிறது. கரூரில் 41 பேர் பலியான சம்பவத்தில் சில இளைஞர்கள் போதையில் இருந்துள்ளதாகத் தெரிகிறது. கூட்டத்தில் கழுத்தை நெரித்துக் கொன்றதற்கும், கல் வீசியதற்கும், ஸ்ப்ரே அடித்ததற்கும் ஆதாரம் உள்ளதா? புஸ்ஸி ஆனந்த் மீது வழக்கு போட்ட தமிழக அரசு, விஜய், ஆதவ் அர்ஜுனா மீது மட்டும் வழக்கு போட அஞ்சுகிறதா? விஜய் மீது வழக்குப் பதிவு செய்யாததில் த.வெ.க. -தி.மு.க. இடையே மறைமுக டீலிங் உள்ளதா?'' என்று பரபரப்பாக பேசியுள்ளார்.

**–கீரன்**

அட்டைப் படம்: AI தொழில்நுட்பம்

PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025 Date of Publication on posting : Every Tuesday & Friday




# நக்கீரன்

வாரமிருமுறை

## சந்தா சிறப்பு சலுகை!

**3 வருட சந்தா**
ரூ. ~~9,360~~
ரூ.4,680 மட்டுமே!

வாசகர்களின் இதயம் தேடி... உங்கள் இல்லத்திற்கே வருகிறோம்!

**5 வருட சந்தா**
ரூ. ~~15,600~~
ரூ.6,240 மட்டுமே!

**1 வருட சந்தா**
ரூ. ~~3,120~~
ரூ.1,870 மட்டுமே!

தொடர்புக்கு... 96770 91367 96770 91385 89398 82466 044-26881700

http://mags.nakkheeran.in

advt